# CATUSSLOKI




Annotated Commentary in Tamil By

NelvAy naidhruva mADabhUshi

SrI Sowmianarayanan Swami

## ABOUT THE AUTHOR

SrI SowmyanArAyanachar swami is C.A by profession. Swami joined United India Insurance in 1968 and worked there till 1998. Swami was a general manager at United India. From 1999 to 2002 swami was in deputation at GEC Housing Finance as CEO.

Swami is in his 66th thirunakshatram. Goshtipuram Sowmyannarayanachar swami is swami's maternal grand uncle. He is the maapillai of Parithipattu Vangeepuram Srinivasachar swami [aka Upplili swamy (thiru thambi of Devanarvilagam SrImad Azhagiasingar)]. Samaashrayana and Baranyasa acharyan is Kozhialam swami. Swami had his Grantha chathushtaya kalakshepam under the tutelage of Goshtipuram Vasudevachar swami.

SwAmi kindly obliged to the request of the Sri Vedantha Desika Sampradaya Sabha members and had delivered upanyasams on Swami Desikan's Srimad Rahasyatraya Saram for almost 2 years! There were more than 50 vidhyarthis who had attended and enjoyed these lectures.

SwAmi is well known as a Pramaanikar and strictly adheres to the visheshartham taught by G.S (ramanujachar) and to the sameecheena ukthis. His eloquent explanations are always tinged with simplicity and elegance so that even very subtle and difficult concepts are made easily understandable.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *
* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

ஸ்ரீ :

ஸ்ரீ ஆளவந்தாரின்
**श्री चतुःश्लोकी**யும்

स्वामि निगमान्त महादेशिकனின் **रहस्यर**க்ஷை
என்ற संस्कृत व्याख्यानமும் அதைத் தழுவிய தமிழ் விளக்கமும்

by
श्रीमतां श्री रङ्गरामानुज महादेशिकानां
अङ्घ्रिराजीवरजःकणः

நெல்வாய் नैध्रुव माडभूषि सौम्यनारायण दासः

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *
* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

श्रीः

स्वादयन्निह सर्वेषां त्रय्यन्तार्थं सुदुर्ग्रहम् ।
स्तोत्रयामास योगीन्द्रः तं वन्दे यामुनाह्वयम् ।।
यत्पदांभोरुह ध्यान विध्वस्ताऽशेष कल्मषः ।
वस्तुतामुपयातोऽहं यामुनेयं नमामि तम् ।।
नमो नमो यामुनाय यामुनाय नमो नमः ।
नमो नमो यामुनाय यामुनाय नमो नमः ।।

श्रीः

श्रीमते रामानुजाय नमः ।
श्रीमते निगमान्त महादेशिकाय नमः ।
श्रीमते रामानुजार्य महादेशिकाय नमः ।

## விண்ணப்பம்

* * *

नमो रामानुजार्याय सौम्यमूर्ति सुसूनवे ।
यस्य प्रसादात् वक्ष्यामि चतुःश्लोकी स्तुतिं शुभाम् ।।

ஒரு ग्रन्थத்தின் ஏற்றம் மூன்று அளவுகளால் ஆராயப்படுகிறது; ஒன்று वक्तृ वैलक्षण्यं, இரண்டு विषय वैलक्षण्यं, மூன்று ग्रन्थ वैलक्षण्यम् । **श्री चतुःश्लोकी** என்ற स्तोत्रं, இம் மூன்றாலும் ஒப்பற்றதாக இருப்பதைக் காணலாம்.

वक्तृ वैलक्षण्यं :- இந்த ग्रन्थம், 'पितामहं नाथमुनिं विलोक्य प्रसीद' என்று மறுத்தருள ஒண்ணாதபடி, भगवाனை निर्बन्धिக்கும் பெருமையுடைய श्रीमन् नाथमुनिகளுடைய திருப்பேரரும், ஸ்ரீ ஈச்வரபட்டாழ்வானின் திருக்குமாரருமான ஸ்ரீ ஆளவந்தார் என்று அழைக்கப்படும் श्री यामुनाचार्यரால் அருளிச்செய்யப் பட்டது. இவருடைய மற்ற நூல்கள், आगम प्रामाण्यम्, पुरुष निर्णयम्, सिद्धित्रयम् (आत्म-ईश्वर-संवित्सिद्धि), गीतार्थ सङ्ग्रहम्, स्तोत्र रत्नम् ஆகியவை. श्री भाष्यकारர் श्री विशिष्टाद्वैत सिद्धान्तத்தை स्थापिப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் இவர். 'யதிகளுக்குள்

உயர்ந்தவனான யமுனைத் துறைவனின் திருவடிகளை आश्रय மாகப் பற்றிய நாம், "நீசர்தம் வாசல் பற்றி, துதிகற்று உலகில் துவளமாட்டோம்" என்று அரங்கத்தமுதனாரும்; 'நாங்கள் ஸ்ரீ ஆளவந்தார் அடியோங்கள்; ஆகையால் அல்வழக்காகிற, தகாத ஒழுக்கங்களைப் போதிக்கும் பிற शास्त्रங்களில் படியமாட்டோம்' என்று स्वामि देशिकனும் நெஞ்சு நிமிர்த்தியது, இவர் நம்மை ஆளவந்தார் என்ற காரணத்தினால் அல்லவா!

विषय वैलक्षण्यं :- எம்பெருமானுக்கு समமானதும் अनुगुण மானதுமான स्वरूप-रूप-गुण-विभव-चेष्टितங்களை स्वयமாகவே உடைத்தவளான பிராட்டி, இந்த ग्रन्थத்தின் विषयமானதால், प्रपत्तिக்கு पूर्वाङ्गமான पुरुषकार प्रपत्ति போலும் அமைந்துள்ளது, இந்த श्री चतु:श्लोकी !

ग्रन्थ वैलक्षण्यं :- நம் पूर्वाचार्यர்களால் संस्कृत श्लोकरूपமாக साधिக்கப்பட்ட स्तोत्रங்களில் முதன்மையானது இக்ग्रन्थं । वेद-वेदान्तங்கள், परमपुरुषत्वத்தை निर्णयिக்க, जगत्कारणत्वத்தையும் श्री- पतित्वத்தையும் प्रधान लक्षणங்களாகக் கூறுகின்றன. ஸ்ரீ ஆளவந்தாரின் மற்றொரு स्तोत्रமானதும், உயர்வின் பெருமை யினால் பொதுப் பெயரையே தனிப்பெயராகக் கொண்டதுமான स्तोत्ररत्नத்தில், "மிகவும் अभिमतமாயும் अनुरूपமாயுமுள்ள सह धर्मिणिயான பிராட்டியோடு கூடியிருப்பதால் ஏற்பட்ட श्रीमन्नारायण னின் सर्वाधिकत्वं' பரக்கப் பேசப்பட்டதல்லவா; श्री चतु:श्लोकी, இந்த स्तोत्र रत्नத்துக்கு गर्भ போன்றதாக அமைந்துள்ளது.

भगवाனுடைய सर्व शेषित्वं, निरवधिक निर्बाधमहिमा, फल प्रदत्वं, प्राप्यत्वं ஆகிற நான்கு अंशங்கள், ब्रह्मसूत्रத்தில், நான்கு अध्यायங்களாலே முறையே சொல்லப்பட்டது போலவே, அவ்

अंशங்களைத் தன்னிடத்தேயும் கொண்ட பிராட்டியை, ஸ்ரீ ஆளவந்தார் நான்கு श्लोकங்களால் இந்த श्रीचतुःश्लोकीயில் स्तोत्रं செய்கிறார். மேலும், அவருக்குப் பின்னிட்ட ग्रन्थங்களான श्रीभाष्यकारரின் श्री शरणागतिगद्यं (முதல் चूर्णिகை), श्रीवत्सचिन्ह मिश्रரின் श्रीस्तुतिः, श्री पराशर भट्टரின் श्रीगुणरत्न कोशः, स्वामि देशिकனின் श्रीस्तुतिः, श्री कुमार वरदाचार्यரின் लक्ष्मी शतकं, श्री वेङ्कटाध्वरिயின் लक्ष्मी सहस्रं, श्रीमद् गोपालदेशिक (திருக்குடந்தை தேசிக)னின் कोमलादण्डकं போன்ற श्रीलक्ष्मी विषय स्तोत्रங் களுக்கெல்லாம் श्री चतुःश्लोकी வழிகாட்டியாக அமைந்துள்ளது.

उपक्रम उपसंहारौ अभ्यासः अपूर्वता फलम्। अर्थवाद उपपत्ती च लिङ्गं तात्पर्य निर्णये ।। (தொடக்கமும் முடிவும் ஒரு விஷயத் தைப்பற்றியே இருத்தல்; அதைப் பலமுறை கூறுதல்; புதிதாகக் கூறுதல்; பலன் சொல்வது; स्तोत्रं செய்தல்; யுக்திகளை உரைத்தல் ஆகியவை ஒரு நூலின் கருத்தைக் காட்டுபவை) என்ற लक्षणங் கள் இக்ग्रन्थத்தில் முழுமையாகப் பொருந்தியுள்ளன. இதற்கு स्वामि निगमान्त महादेशिकன், अद्भुतமான व्याख्यानं அருளி யிருக்கிறார். மேலும், व्याख्यान चक्रवर्ती ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை (श्री कृष्णपादः), அவருடைய திருக்குமாரர் (நாயனா ராச்சான் பிள்ளை என்று प्रसिद्धரானவர்) ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் ஆகியோர்களின் விரிவான व्याख्यानங்களும் உண்டு.

இத் தமிழ்விளக்கநூல், இவைகளைத் தழுவியதே. இதில்

- पूर्वपक्षि**களின் வாதங்களை** '***சாய்வு எழுத்திலும்***';

- पूर्वपक्षि**களுக்கு, வேறு சிலர் சொல்லும் (ஆனால் ஸ்வாமி தேசிகனுக்கு ஸம்மதமில்லாத) ஸமாதானத்தை,** '***கீழ்க்கோடிட்ட சாய்வு எழுத்திலும்***';

**- உறுத்திச் சொல்லவேண்டிய நம்** पक्ष**த்தை '<u>கீழ்க் கோடிட்ட</u> நேர் எழுத்திலும்'** குறிப்பிட்டுள்ளேன்.

இதை அநுஸந்தித்து, दिव्य दम्पति களின் கடாக்ஷத்தைப் பெற்று உய்யுமாறு सविनयं प्रार्थि க்கிறேன்.

மும்பயீ श्रीमतां रङ्गरामानुज महादेशिकानां
01-01-2008 अङ्घ्रिराजीवरजःकणः

நெல்வாய் नैध्रुव माडभूषि सौम्यनारायण दासः

श्रीः

# श्री चतुःश्लोकी

* * * *

श्रीमद्यामुनमुनये नमः
श्रीमते रामानुजाय नमः

* * * *

कान्तस्ते पुरुषोत्तमः फणिपतिः शय्यासनं वाहनं
वेदात्मा विहगेश्वरो यवनिका माया जगन्मोहिनी ।
ब्रह्मेशादि सुरव्रजः सदयितः त्वद्दास दासीगणः
श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम् ।। ( 1 )

**अन्वयः** - (हे) भगवति! पुरुषोत्तमः ते कान्तः, फणिपतिः (ते) शय्यासनं, वेदात्मा विहगेश्वरः (ते) वाहनं, जगन्मोहिनी माया (ते) यवनिका, ब्रह्मेशादि सुरव्रजः सदयितः त्वद्दास दासीगणः, ते नाम च श्रीरित्येव, त्वां वयं कथं ब्रूमः !

<u>பதவுரை</u> :

(हे) भगवति - षाड् गुण्यं நிறைந்தவளே;

पुरुषोत्तमः - புருஷர்களில் உயர்ந்தவனானவன்;

ते कान्तः - உனக்குப் ப்ரியமான-தகுந்த கணவனாகிறான்;

फणिपतिः - ஸர்ப்ப ராஜனான திருவனந்தாழ்வான்;

(ते) शय्यासनं - உனக்கு படுக்கையும் இருக்கையுமாகிறான்;

वेदात्मा विहगेश्वरः - வேதமே வடிவான புள்ளரையன் (பெரிய திருவடி);

(ते) वाहनं (आसनं च) - உனக்கு வாஹனமும் இருக்கையும் ஆகிறான்;

जगन्मोहिनी माया - உலகிலுள்ள ஜீவர்களுக்கு விபரீத ஜ்ஞானத்தை விளைவிக்கும் ஆச்சர்யமான மூலப்ரக்ருதியோ,

(ते) यवनिका - உனக்கு சேஷமாயிருக்கும் திரையாகும்;

ब्रह्मेशादि - பிரமன், சிவன் முதலான

सुरव्रजः - தேவர்குழாம்;

सदयितः - தந்தம் மனைவிகளோடு சேர்ந்தே;

त्वद्दास दासीगणः - உனக்கு தாஸ-தாஸிகளின் கூட்டமாக ஆகிறார்கள்;

ते नाम च श्रीरित्येव - உன்னுடைய திருநாமமோ 'ஸ்ரீ' என்பதேயாம்;

त्वां वयं - (இப்படிப்பட்ட பெருமைகளையுடைய) உன்னை, (சிறுமதி படைத்த) நாங்கள்;

कथं ब्रूमः ! - எவ்வாறு தெளிய உரைப்போம் !

श्रीः
श्रीमते निगमान्त महादेशिकाय नमः ।
**श्री रहस्यरक्षै**யில் चतुःश्लोकी अधिकारः

**स्वशेषाशेषार्थो निरवधिक निर्बाधमहिमा**
**फलानां दाता यः फलमपि च शारीरकमितः ।**
**श्रियं तत्सध्रीचीं तदुपसदन त्रासशमनीं**
**अभिष्टौति स्तुत्यां अवितथमतिः यामुनमुनिः ।।***

**अत्र समन्वय-अविरोध-साधन-फल विषय शारीरक चतुरध्यायी समधिगतस्य भगवतः सर्वप्रकार अभिमत अनुरूप सह (धर्मचारिणी )**

---

भगवान் எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் மேம்பட்டவன் என்பதை, शारीरक शास्त्रத்தின் நான்கு अध्यायங்கள், முறையே - 1) भगवाனுக்கு शेषभूतமான எல்லா வஸ்துக்களும் அவனுடைய

---

* *यः -எந்த பகவான், स्वशेष अशेषार्थः -எல்லா வஸ்துக்களையும் தனக்கு சேஷபூதங்களாக உடையவனாகவும், निरवधिकनिर्बाध महिमा -எல்லையில்லாததும் ஒருவித விரோதமில்லாததுமான மஹிமையை உடையவனாகவும், फलानां दाता -பலங்களை யெல்லாம் கொடுப்பவனாகவும், फलमपि च -ப்ரயோஜனமாக வும், शारीरकमितः -சாரீரக சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டவனோ तत्सध्रीचीं -அவனுக்கு ஸமானமானவளும், तदुपसदनत्रासशमनीं -அவனை உபாஸிக்க முனைவதில் உண்டான பயத்தைப் போக்கடிப்பவளுமான, श्रियं -லக்ஷ்மியை, अवितथ मतिः यामुन मुनिः -பொய்யில்லாத புத்தியுடைய ஸ்ரீ ஆளவந்தார், स्तुत्यां अभिष्टौति - இந்த சதுஸ்ச்லோகியினால் ஸ்துதிக்கிறார்.*

**धर्मिणी विशिष्टतयाऽपि सर्वाधिकत्वं** कश्श्रीः श्रियः **इत्युक्त कैमुतिक-न्याय / काकुगर्भया चतुश्श्लोक्या प्रकाशयन्, प्रथमं श्रियः प्रति पिपादयिषितानां विभूतिद्वय शेषित्वादीनां स्थापकमाह** कान्तस्त **इति ।**

-----------------------------------------------------------

ப்ரயோஜனத்திற்காகவே இருக்கின்றன; 2) இந்த விஷயத்தை மற்ற மதத்தினர் யுக்திகளினால் எதிர்க்கமுடியாது; 3) फलத்தைக் கொடுப்பவன் அவனே; 4) फलமும் அவனே என்று - விளக்கு கின்றன. இதே आकारங்களைத் தானும் கொண்டவளாயும், ப்ரிய மானவளாயும் தகுந்தவளாயும் இருக்கும் அவருடைய பத்னி யான **லக்ஷ்மீ,** அவனுடன் சேர்ந்திருப்பதினாலும் அவனுக்குப் பெருமை, என்பது "कः श्रीश्श्रियः" என்ற स्तोत्ररत्न श्लोकத்தில் சொல்லப்படுகிறது. இந்தச் சிறப்புகள் **லக்ஷ்மீ**க்கும் உண்டு என்பதை, இதை ஒட்டிய कैमुतिक-काकु न्यायங்களால்**, இந்த चतुःश्लोकी ग्रन्थத்தில் நான்கு श्लोकங்களில் ஸ்ரீ ஆளவந்தார் விளக்குகிறார்.

முதல் श्लोकத்தில், नित्य-लीला विभूतिகளிலுள்ள எல்லா वस्तुக்களுக்கும், भगवाனுடன் சேர்ந்து பிராட்டியும் स्वतः शेषि என்பதையும்; (அவள் தானே இசைந்து / விரும்பி எம்பெருமா னுக்கு शेषமாகிறாள் என்பவைகளையும்) स्थापिக்கிறார்,

---

** *'சிறிய வஸ்துவுக்கே இப்படியென்றால், பெரிய வஸ்துவைப் பற்றிக் கேட்பானேன்' என்றவாறு சொல்வது* कैमुतिक न्यायम्.

*எதிர்மறையாகச்சொல்லி, ஒரு பொருளின் அர்த்தத்தை உறுதி யாக்குவது* काकु न्यायम् .

कान्तः - **प्रियः, अनुरूप पतिः इत्यर्थः ।**

-----------------------------------------------------------

ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, 'முதல் श्लोकத்தில். பிராட்டியினுடைய नारायण संबन्ध निबन्धनமான परत्वं, प्रतिपादिக்கப்படு கிறது' என்கிறார்,

<u>விளக்கம்</u>: **कान्तः - प्रियமானவன்; अनुरूपமான கணவன் என்று பொருள்.** பிராட்டியை எம்பெருமான் संबन्धத்தாலும், இவனைப் பிராட்டி संबन्धத்தாலும் நிரூபிப்பது வழக்கு[1]. ('रामानुजं लक्ष्मणपूर्वजं च' என்கிறார் वाल्मीकि) இங்கு 'भर्ता'என்னாமல், प्रमाणப்படி[2] 'कान्तः' என்கிறார்,

---

*1. -यतोऽहं आश्रयश्चास्याः मूर्तिर्मम तदात्मिका -(ஸாத். ஸம்) - எதனால் நான் அவளுக்கு ஆச்ரயமோ அதே காரணத்தினால் என் உருவும் அவளை ஆத்மாவாகக்கொண்டது.'*
*-कःश्रीःश्रियः - (ஸ். ரத். 12) 'திருவுக்கும் திருவாகியவன் யார்?'*
*-श्रियः श्रियं - (ஸ். ரத். 45) 'திருவுக்கும் திருவாகிய';*
*-திருவுக்கும் திருவாகிய செல்வா (பெரிய திரு 7-7-1);*
*-என் திருமகள்சேர் மார்வனே என்னும் -(திருவாய் 7-2-9)*

*2. -तुल्यशील वयोवृत्तां तुल्य अभिजन लक्षणाम् । राघवोऽर्हति वैदेहीं तं चेयं असितेक्षणा -(ராமா 5-16-5) -'ஒரே விதமான குணம், வயது, நடத்தை,குலம், லக்ஷணங்கள்கொண்ட வைதேஹிக்கு, ராகவனே தகுந்தவன்; கருத்த கண்களையுடைய இவளும், அவருக்கே தகுந்தவள்'.*
*-भगवन्नारायण अभिमत अनुरूप स्वरूप रूप गुण विभव ऐश्वर्य शीलादि अनवधिकातिशय असङ्ख्येय कल्याण गुणगणां - (ச. கத்) 'பகவானான நாராயணனுக்கு இஷ்டமாகவும் தகுந்ததாகவும் உள்ள ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி, ஐச்வர்யம், சீலம்*

ते - **सर्वमङ्गळास्पदत्वेन प्रमाणसिद्धायाः। एतत् पदद्वय अभिप्रेतं व्यञ्जितं गद्ये** - देवदेव दिव्यमहिषीं **इति।** द्वाविमौ पुरुषौ लोके **इत्यादिभिः स्वेनैव निरुक्तेन परत्व व्यञ्जकेन समाख्या विशेषण लक्ष्मीकान्तं विशिनष्टि** पुरुषोत्तम **इति। अत्र पञ्चम्यादि विभक्तित्रयेऽपि समासः शब्दवित्संमतः ।**

------------------------------------------------------------

**ते -** எல்லாவித மங்களங்களுக்கும் காரணமானவள் என சிறந்த ப்ரமாணங்கள் போற்றும், **அப்படிப்பட்ட உன்னுடைய.**

कान्तः, ते, என இரு பதங்களால் சொன்னதை, शरणागति गद्यத்தில் 'देवदेव दिव्यमहिषीं' என்றார், ஸ்ரீ பாஷ்யகாரர்.

**पुरुषोत्तमः** - भगवाனுக்கு அனேகம் பெயர்களிருக்க, पुरुषोत्तमன் என்றது, गीतैயில் 'द्वाविमौ पुरुषौ लोके' [3] என்று தொடங்கி அவனாலேயே சிறப்பிக்கப்பட்டதும், அவனுடைய परत्वத்தை வெளியிடுவதுமான विशेषத்தைக் குறிக்கிறது. இச் சொல்லை, 7,6,5-ம் வேற்றுமைஉருபுகொண்ட विग्रहமாகப் பிரித்து

---

*முதலான எல்லையற்ற மேன்மையுடையவளும், கணக்கற்ற கல்யாண குணகணங்களையுடையவளும்.'*

*-श्री वल्लभ - (ஏ. கத்) 'பெரிய பிராட்டிக்கு ப்ரியமானவனே'*

*-भोग उपोद्घात केलीचुलकित भगवद्वैश्वरूप्य अनुभावा -*

*(ஸ்ரீகுண.4) 'பகவானின் விச்வரூப அனுபவத்தையும் தன் போகாரம்ப விளையாட்டாலே கையளவாக ஆக்குபவளும்'*

*-உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ - (திருவாய்-10-10-6)*

*-பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு - (திருநெடுந்-18)*

*3.-द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च । क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ।। उत्तमः पुरुषस्त्वन्य : परमात्मेति उदाहृतः*

**अनेन हिरण्यगर्भादीनां अपि भगवदपेक्षया अधमत्व व्यञ्जनात् तत्पत्नीभ्यः पुरुषोत्तम पत्न्या उत्तमत्वं सूचितम् । अवतारेऽपि ह्यसौ** नारीणामुत्तमा **इत्युच्यते । एवं अस्याः पति-**

------------------------------------------------------------

- 'पुरुषेषु उत्तमः - புருஷர்களில் உத்தமன், पुरुषाणां (मध्ये) उत्तमः - புருஷர்களுக்கு நடுவில் உத்தமன், 'पुरुषेभ्यो उत्तमः - புருஷர் களைவிட உத்தமன்; என, ஒன்றைவிட ஒன்று அதிகப் பெருமை மிக்கதாக அமைந்திருப்பதை शास्त्रं அறிந்தவர் ரஸிப்பர்.

இப்படி, भगवाனைப் பார்க்கில் நான்முகன் முதலாய எல்லாத் தேவர்களுடைய கீழ்ப்பட்ட நிலையைக் குறித்ததால், அவர்களின் மனைவிகளைவிட, புருஷோத்தமனின் மனைவி யான பிராட்டிக்குள்ள उत्तमத்தன்மையும் வெளிப்படுகிறது. अवतार दशैயிலும் அவள் உயர்ந்தவளே.[4] ஆக, கணவனின்

---

*यो लोकत्रयमाविश्य बिभर्ति अव्यय ईश्वरः ।। यस्मात् क्षरं अतीतः अहं अक्षरादपि चोत्तमः । अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ।। க்ஷரன், அக்ஷரன் என உலகில் புருஷர்கள் இருவர். எல்லா பூதங்களும் க்ஷரனாகும். கூடஸ்தனான முக்தாத்மா அக்ஷரனா கும். எவன் மூவுலகங்களிலும் நுழைந்து,அவற்றை தரித்து, குறைவற்றவனாக, நியமிப்பவனாக, பரமாத்மா என அழைக்கப்பட்டு விளங்குகிறானோ அந்த புருஷோத்தமன் மற்ற புருஷர்களைவிட வேறுபட்டவன். நான், ஜ்ஞானத்தில் ஏற்றக் குறைவுகள் உள்ள க்ஷரனை அதிக்ரமித்து, ஏற்றக்குறை வுகள் அற்ற முக்தனைவிட மேலானவனாய், ச்ருதி-ஸ்ம்ருதி யில் புருஷோத்தமன் என்று ப்ரஸித்தி பெற்றிருக்கிறேன்.'*

4. *-नारीणां उत्तमा वधूः (ராமா 1-1-27) 'பெண்களிலே மிகமிகச் சிறப்பு வாய்ந்தவள்'*

**संबन्धेन प्रकर्ष उक्तः । अथ पत्युरिव विभूतिसंबन्धेनापि प्रकर्षं वदन्, नित्यसूरि परिवृढानामपि एतदुपकरणत्वं उदाहरति** फणिपतिः शय्ये**ति।**

---

சேர்க்கையால் இங்கு பிராட்டிக்கு உயர்வு குறிக்கப்படுகிறது.

இங்கு ஶ்ரீ நாயனாராச்சான் பிள்ளை (ஆச்சான்), "पुरुषः என்று अचित्துக்களைவிட வேறுபட்ட बद्धரையும், उत्पुरुषः என்று बद्धரைவிட வேறுபட்ட मुक्तரையும், उत्तरः पुरुषः என்று मुक्तரிலும் வேறுபட்ட नित्यரையும் சொல்லி, இவர்கள் எல்லோரையும்விட வேறுபட்டவனான ईश्वरனை उत्तमः पुरुषः என்றது. हेयमूलமான अचित्தும், हेयसहितரான बद्धரும், हेयरहितரான मुक्तரும், हेय प्रागभावரான नित्यரும் हेयनिवर्तकனுக்கு सदृशர் அன்றிறே!" "कान्तः, ते, पुरुषोत्तमः என்ற மூன்று पदங்களுடன், श्लोकத்தின் 4-ம் पादத்திலுள்ள 'एव' என்பதைச் சேர்த்து, பல योजनैகளாக, 'ते कान्तः पुरुषोत्तम एव (षणु-दाने என்ற व्युत्पत्तिயின்படி, அளவின்றிக் கொடுப்பவர்களில் முதன்மையானவன் எனப் பேர் பெற்றவன் உனக்கு कान्तன்); ते कान्त एव पुरुषोत्तमः (உனக்கு कान्तனான பின்பிறே அவன் पुरुषोत्तमன் ஆனான்; वेदान्तங்கள் இவனை परतत्वं என்று निर्णयित्तதே உன்னுடைய पादचिह्नங்களை அவன் மார்பிலே கண்ட பின் பிறே); ते एव कान्तः पुरुषोत्तमः ('உனக்கேற்கும்' என்று இவள்தான் लोकभर्ताவையிறே मम भर्ता என்று வரிப்பது)" என்கிறார்.

स्त्रीகளுக்கு पुरुषனே சிறந்த भूषणமாகையாலே முதலில் पुरुषोत्तमனைச் சொல்லி, மேலே கணவனுக்குப்போலவே, இவளுக்கும் उभयविभूति பேரில் இருக்கும் सर्वाधिकत्वத்தைச்

**अत्र** फणिपति**शब्देन सुरभि सुकुमार शीतळ विशाल उन्नतत्वादि रूपाः पर्यङ्कगुणा व्यज्यन्ते । तत्प्रभावञ्च -**

-----------------------------------------------------------

சொல்லவேண்டி.[5] முதலில் नित्यसूरिகளில் மிகவும் உயர்ந்தவர் களும்கூட இவளுக்கு कैङ्कर्यं செய்யக் கடமைப்பட்டமையை उदाहरिக்கிறார், (இருவர் अधिकारिயானால் ஈரரசுபட்டு உலகம் கெடுமே என்ற பயத்தைப்போக்க, "அவனுக்கு ஒருமித்த கருத்து டைய மனைவி" என்று சொல்கிறார் - உத்தமூர் ஸ்வாமி.)

**फणिपतिः शय्यासनं** - फणिपतिः என்றதால் पर्यङ्कத்தின் विशेष गुणங்களான 'மணம், மென்மை, தண்மை, அகன்ற தன்மை, மேன்மை மற்றும் வெண்மை, தூய்மை,' இவை குறிக்கப்படுகிறது. சேஷனின் பெருமை, பல ப்ரமாணங்களிலும், स्तोत्ररत्नத்திலும்[6] பேசப்பட்டது.

---

5. *-अकारेणोच्यते विष्णुः सर्व लोकेश्वरो हरिः । उद्धृता विष्णुना लक्ष्मीः उकारेणोच्यते सदा । मकारस्तु तयोर्दासः इति प्रणवलक्षणम्-*
*'எல்லா உலகங்களுக்கும் ஈச்வரனும், ஹரி-விஷ்ணு எனப்படுப வனான எம்பெருமான் 'அ'காரத்தினலும், விஷ்ணுவினால் மார்பில் எப்போதும் தரிக்கப்பட்டவளான லக்ஷ்மீ, 'உ' காரத்தி னாலும், அவர்களுக்கு தாஸனான ஜீவன் 'ம'காரத்தினாலும் சொல்லப்படுகிறான் என்பதே ப்ரணவ லக்ஷணம்.'*
*-भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते । अहं सर्वं करिष्यामि जाग्रतस्स्वपतश्च ते ।।* *(ரா.2-31-25) -'நீர் வைதேஹியுடன் மலைத் தாழ்வரைகளில் விளையாடுவீர். அடியேன் நீர் விழித்துக் கொண்டிருக்கும்போதும், தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்'*

6. *-कल्पान्ते यस्य वक्त्रेभ्यः विषानलशिखोज्वलः । सङ्कर्षणात्मको*

कल्पान्ते यस्य वक्त्रेभ्यो विषानलशिखोज्ज्वलः । सङ्कर्षणात्मको रुद्रो निष्क्रम्याति जगत्रयम्। स बिभ्रच्छेखरीभूतं अशेषं क्षितिमण्डलम्। आस्ते पातालमूलस्थः शेषोऽशेषसुरार्चितः । तस्य वीर्यं प्रभावं च स्वरूपं रूपमेव च । न हि वर्णयितुं शक्यं ज्ञातुं वा त्रिदशैरपि ।। **इत्यादिषु प्रसिद्धः । स्तोत्रे च** तया सहासीनं अनन्तभोगिनी **इत्यादौ ।**

-----------------------------------------------------------

இங்கு, பெரியவாச்சான்பிள்ளை, "பிராட்டி अभिमதைமட்டு மின்றி, अनुरूपैயுமாயிருப்பதால், भगवाனுக்கான படுக்கை இவளுக்கும் प्राप्तं ; आत्मवस्तुவுக்கு ஒரு मिथुनशेषत्वं, परमपुरुषार्थं ஆகையாலே" என்கிறார். 'निरतिशयभोग्यமான भगवदनुभवத்துக்கு परिवाहरूपமாக வாயாரப் புகழுகைக்கீடாக பலவாய்த் தலைகளை உடையனாய், शेषवृत्तिपरரான अशेषர்க்கும் उपमान् भूमियாய், लब्ध स्वरूपனாய் இருக்கும் திருவனந்தாழ்வான்" என்கிறார் ஆச்சான்.

---

*रुद्रः निष्क्रम्याति जगत्रयम् ।। स बिभ्रच्छेकरीभूतं अशेषं क्षिति मण्डलम् । आस्ते पातालमूलस्थः शेषोऽशेषसुरार्चितः ।। तस्य वीर्य प्रभावञ्च स्वरूपं रूपमेव च। नहि वर्णयितुं शक्यं ज्ञातुं वा त्रिदशैः अपि। (வி.பு. 2-5-21,22,23) -'கல்பத்தின் முடிவில் எவன்வாய்களிலிருந்து விஷத்தீயின் ஜ்வாலைகளினால் ப்ரகாசிக்கும் ஸங்கர்ஷண ரூபனான ருத்ரன் வெளிக்கிளம்பி மூவுலகங்களையும் விழுங்குகின்றானோ; அந்த சேஷன், எல்லாப் பூமிமண்டலத்தையும் கொண்டையைப்போல் சுமந்தவனாய், எல்லாதேவர்களாலும் பூஜிக்கப்பட்டவனாய்,பாதாளத்தினடியிலிருக்கிறான். அவனுடைய வீர்ய-ப்ரபாவ-ஸ்வரூப-ரூபமும் தேவர்களாலும் கூட அறிவதற்கும், வர்ணிப்பதற்கும் முடியாது.*

*-तया सहासीनं अनन्तभोगिनि - (ஸ்தோ. ர 39) 'பிராட்டியுடன்கூட नागपर्यङ्गத்தில் அமரும்'*

आसन**शब्द इह काकाक्षि न्यायात् उभयतो योज्यः। उक्तं हि आद्ये पुराणे तन्नामसहस्रे** -भोगप्रिया भोगवती भोगीन्द्र शयनासना **इति;** अजिता कर्षणी नीतिर्गरुडा गरुडासना **इति च ।** वहेयं यज्ञं प्रविशेयं वेदान् **इति सौपर्णश्रुति विवक्षितं वेदाभिमानिदेवता अधिष्ठातृत्वं अभिप्रेति आह** -वेदात्मा विहगेश्वर **इति। वेद अधिष्ठातृतया वेदानां आत्मा; यद्वा, तद्विशिष्टत्वेन तत्समा -नाधिकरणतया वेद आत्मा यस्येति विग्रहः।**

---

**आसनं** - गरुडனை பிராட்டிக்கும் आसनமாகப் प्रमाणங் கள் சொல்கின்றன[7] ஆக, काकाक्षि न्यायப்படி, फणिपति- विहगेश्वरன் இருவருக்கும் இப்पदं பொதுவானது.

**वेदात्मा विहगेश्वरः** - 'वहेयं यज्ञं प्रविशेयं वेदान्' என்று विहगेश्वरसंहितैயின்படி, கருடன், वेदத்துக்கு अधिष्ठानदेवतैயாவார். இதனால் 'वेदानां आत्मा' என்றோ, அல்லது वेदத்தோடு கூடியிருப்பதால் सामानाधिकरण्यமாக 'वेदः आत्मा यस्य, सः' என்னலாம்.[8]

---

*7. -भोगप्रिया भोगवती भोगीन्द्र शयनासना ; अजिता कर्षिणीनीतिः गरुडा गरुडासना* - (ல.ஸஹ 120, 100)

*8. -सुपर्णोऽसि गरुत्मान् त्रिवृत्ते शिरः, गायत्रं चक्षुः, स्तोम आत्मा, साम ते तनूः, वामदेव्यं, बृहद्रथन्तरे पक्षौ, यज्ञा यज्ञियं पुच्छं, छन्दांसि अङ्गानि, धिष्णियाः शफाः, यजूंषि नाम* - (தைத். 4-1-42)
*-नेत्रं गायत्रमूचे त्रिवृदिति च शिरो नामधेयं यजूंषि, छन्दांस्यङ्गानि धिष्ण्यात्मभिरजनि शफैर्विग्रहो वामदव्यम्। यस्य स्तोमात्मनोऽसौ बृहदितर गरुत्तादृशाम्नायपुच्छः, स्वाच्छन्द्यं नः प्रसूतां श्रुतिशत शिखर अभिष्टुतात्मा गरुत्मान्* - (கரு பஞ்.3)

सुपर्णोऽसि गरुत्मान् **इत्यादिषु अपि अस्य वेदात्मत्वं ग्राह्यम् । एवं सर्ववेदाभिमानतया सर्वज्ञत्वमपि अस्य सूच्यते । बलादि गुणजातमपि अमृत-हरणादिषु प्रसिद्धम् ।**
**यद्यपि** विहगेश्वर**शब्दः** सत्यः सुपर्णो गरुडस्ताक्ष्यर्स्तु विहगेश्वरः **इति सात्वदादिषु प्राणादिपञ्चक अधिपतित्वेन अवस्थि- तस्य गरुडस्य व्यूहविशेषं अभिधत्ते, तथापि अत्र विशेषक अभावात् गरुत्मन्मात्र विषयः । फणिपति-विहगेश्वरयोः उपादानं इहमिथो विरुद्धजातीयैरपि**

------------------------------------------------------------

இதனால் गरुडனின் सर्वज्ञत्वமும் सूचिப்பிக்கப்பட்டது; अमृतहरण वृत्तान्तத்தின் மூலம் இவருடைய बलं, गुणं ஆகியவை அறிய லாம். प्राणपञ्चकமான प्राण-अपान-व्यान-उदान-समानங்களுக்கு முறையே अधिपतिயான, सत्यः-सुपर्णः-गरुडः-ताक्ष्यर्ः-विहगेश्वरः என்ற व्यूहविशेषமாக, இவரை सात्वतसंहितै கூறினாலும், இங்கு அவ்வாறு பிரிக்காததால் गरुडனைத்தான் குறிக்கும்.

'ஒடும் புள்ளேறி' என்று नित्य विभूतिயோடு நில்லாமல், नागपाशविमोचनம் போன்று लीलाविभूतिயிலும் आश्रितरक्षणத்துக்கும், तद्विरोधि निरसनத்துக்கும் अनुकूलனாம்படி இருக்கும் பெரிய திருவடி....... என்றும்; 'वेदात्मा वाहनं என்கையாலே, தங்கள் (தாமஸ)குணங்களுக்கேற்ற वाहनங்களையுடைய अधम देवता भार्यैகளில் பிராட்டிக்குண்டான उत्कर्षம் தோற்றிற்று"; 'புட்கொடி யாய்! தீவாய் நாகணையில் துயில்வானே! திருமாலே!' என்று सर्वाधिकत्व लक्षणங்கள் மூன்றையும், பரகாலன் சேர்த்துப்பாடியது போல், இங்கும் (विहगेश्वरः-फणिपतिः-कान्तः पुरुषोत्तमः என்று) அநுபவிக்கிறார்" என்கிறார் ஆச்சான்.

फणिपति - विहगेश्वरன் இருவரையும் ஒன்றாக எடுத்த தால், 'ஜாதியால் ஒருவர்க்கு ஒருவர் विरोधिயாயினும், सेवन-

**अविरोधेन युगपत् सेव्यत्वं सूच- यति । कैमुत्यात् अन्येषां नित्यानां मुक्तानामपि एतत्परि- जन-परिच्छद भावेन अवस्थानं ख्याप्यते, तेषामपि एतदाज्ञा- करत्वमुक्तं श्रीवैकुण्ठगद्ये** शेष-शेषाशनादि सर्वपरिजनं **इत्यादिना। एवं सर्वस्याऽपि नित्यविभूतेः तच्छेषत्वं तात्पर्यतः प्रदर्शितम्।**

---

कैङ्कर्यங்களைச் செய்வதில் சேர்ந்திருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவர்களைச் சொன்னதால், कैमुतिक न्यायப்படி, மற்ற नित्य-मुक्तர்களும் परिजन-परिच्छदங்களாகி, பிராட்டியின் உத்தரவின்படி நடப்பது குறிக்கிறது[9]. இப்படியால் नित्यविभूतिகளெல்லாம் பிராட்டிக்கு शेषभूतं என்பது तात्पर्यத்தால் கிடைக்கிறது.

'अभिमतैயானால் படுக்கையில் அணைக்கப் प्राप्तமாய் இருக்கும்; ஏகாஸநத்திற்கொண்டு இருக்க योग्यैயன்றிக்கேயாய்த்து இருப்பது [10], இவள் अनुकूलरूपैயாயிருக்கையாலே, இவனுக்கான आसन॒மும்-वाहन॒மும் இவளுக்கும் प्राप्तम्", என்கிறார் பெரிய வாச்சான் பிள்ளை. "குழற்கோவலர் மடப்பாவையும் மண் மகளும் திருவும் நிழல்போல்வனர்' என்றதுபோல் भूमि-नीळैகளும் இவளுக்கு शेषभूतர்கள்" என்கிறார் ஆச்சான்.

---

*9. -शेष शेषाशनादि सर्वं परिजनं -(வை.கத்)*

*10. -वैकुण्ठे तु परे लोके श्रिया सार्धं जगत्पतिः । आस्ते विष्णुः अचिन्त्यात्मा भक्तैः भागवतैः सह ।। 'மேலான உலகமான வைகுண்டத்தில், ஜகத்பதியும், எண்ணவொண்ணா ஸ்வரூபம் உடையவருமான விஷ்ணு, பக்த-பாகவதர்கள்சூழ ஸ்ரீதேவி யுடன்கூட இருக்கிறார்.'*

**अथ लीलाविभूतौ अचिदंशस्य प्रथमं तच्छेषतामाह** यवनिका माया जगन्मोहिनी**ति। अद्य** यवनिका **शब्द अभिप्रेतं गद्ये** भगवत्स्वरूप तिरोधानकरीं **इति विवृतम् । एतत् ग्रन्थद्वय तात्पर्येण दिव्यदंपत्योः अनाश्रित अपेक्षया त्रिगुण तिरस्करण्या तिरोधेयत्वं फलितम् ।** माया **शब्दोऽयं** मायां तु प्रकृतिं विद्यात् **इति प्रकृति विषयतया श्वेताश्वतरैः अधीतः । स च विचित्र सृष्ट्युपकरणतया प्रकृतेः आश्चर्यमयत्वं व्यञ्जयति ।** जगन्मोहिनी**त्यनेन जीवपरमात्मादिषु विपरीत धीहेतुत्वं शब्दादिगुण परिणति शबलित स्वविषय भोग्यता बुद्धिजनकत्वं च विवक्षितम् ।**

---

மேலே, लीलाविभूतिशेषதையைச் சொல்வதற்காக முதலில், कारणமான मूलप्रकृतिயை கூறுகிறார்:

**यवनिका माया जगन्मोहिनी** - यवनिका என்று இங்கும், 'भगवत्स्वरूपतिरोधानकरीं என गद्यத்திலும், அவனுடைய दिव्यात्म स्वरूपத்தையும் दिव्यमङ्गळविग्रहத்தையும், **आश्रितரல்லா தார்க்கு** மறைக்கும் திரைபோன்ற प्रकृतिயின் தன்மை சொல்லப் பட்டது[11]. माया என்பதால், विचित्रமான பலபடைப்புகளில் भगवाனுக்கு உதவியாயிருக்கும் प्रकृतिயின் आश्चर्यमयत्वமும் குறிக்கப்பட்டது. जगन्मोहिनी என்பதால், 'जीव-परमात्मा विषयங்களில் தவறான புத்தி உண்டாவதும், शब्दं முதலிய குணத்தோடு சேர்ந்த தன் शरीरादिகளில் ஈடுபாடு உண்டாக்குவதுமான தன்மை சொல்கிறது.

---

11. *-मायां तु प्रकृतिं विद्यात् मायिनं तु महेश्वरम्* -(ச்வேதா. 4-10) -
*'ஸ்ருஷ்டிக்கு காரணமாகையால் ப்ரக்ருதியை மாயா என்றும், மாயையை தூண்டுபவன் மஹேச்வரனென்றுமறிக.'*

**ईदृश प्रकृतिमोहितानां कर्मवश्यानां सर्वेषामपि विष्णुपत्नी**

-----------------------------------------------------------

இங்கு ஆச்சான்- 'परमात्म-प्रत्यगात्म-स्वविषयமாக अन्यथाज्ञान-विपरीत ज्ञानங்களைப் பிறப்பித்து, அத்தாலே जगत्தை மோஹிப் பிக்கையாலே जगन्मोहिनी என்கிறார். இங்கு, 'निखिल हेयप्रत्यनीक कल्याण गुणविशिष्टனான पुरुषोत्तमனை निर्विशेष चिन्मात्र वस्तु என்று मायावादं சொல்லுதல்; चित्-अचित्-ईश्वरர்கள் மூன்றும் एकद्रव्य परिणामங்களென்று भेदाभेदं சொல்லுதல்; कर्मानुष्ठानத் துக்கு चेतनனுண்டாகில், फलप्रदानத்துக்கு कर्मமுண்டாகில், ईश्वरன் எதற்கு? என்னல்,' இவை **परमात्म** विषयबुद्धियாகும். 'தேஹமே आत्मा; अन्यशेषன்; स्वतन्त्रன்' என்னல், **प्रत्यगात्म** विषय बुद्धियாகும். 'शब्दादि भोग्यत्वबुद्धि பிறப்பிக்கை' **स्वविषय** विप्रतिपत्ति யாகும். இவை மூன்றையும் श्रीभाष्यकारர், 'भगवत्स्वरूप तिरोधान करीं, विपरीतज्ञानजननीं, स्वविषयायाश्च भोग्यबुद्धेर्जननीं' என்றார்"

மேலே, மோஹிக்கப்பட்ட कर्मवश्यர்களுள் 'உயர்ந்தோ'ரான (!) ब्रह्मा-ईशன் இந்திரன் முதலாத் தேவர்குழாமெல்லாம் இவ ளுக்கு शेषமாவதைச்சொல்லி, कैमुतिकन्यायப்படி 'மற்றவர்களைப்

---

*-इन्द्रो मायाभिः पुरुरूप ईयते - (ப்ருஹ 4-5-19) 'பெரிய ஐச்வர்ய முடையதால் இந்த்ரன் எனப்படும்பரமாத்மா, ப்ரக்ருதியாகிற மாயையினால் பல உருவில் ஸஞ்சரிக்கிறான்.*

*-दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया । मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ।। (கீதை 7-14) -'தேவனான என்னால் உண்டாக்கப் பட்டதும், முக்குணங்களையுடையதுமான என் மாயை, தாண்ட அரிதானது. என்னையே சரணமடைபவர்கள் இம்மாயையைத் தாண்டுகிறார்கள்.'*

**शेषत्वं उत्कृष्टमुखेन कैमुत्य न्यायात् उपलक्षयति** - ब्रह्मेशादि सुरव्रजः सदयितः त्वद्दास दासीगण **इति । प्रकर्ष निदर्शनात् ईश्व रत्व शङ्कास्पदयोः** एतौ द्वौ विबुधश्रेष्ठौ **इत्याद्युक्तयोः ब्रह्मेशयोः अपि अग्नीन्द्रादिभिः ऐकराश्य सूचनाय** व्रजगण**शब्दौ।** सदयित **इत्युपादानेऽपि औचित्यात्** दासी**शब्दः तत्पत्न्यंशे अन्वेतव्यः।**

**उक्तार्थे श्रुत्यादीनि प्रमाणानि तिष्ठन्तु, असाधारण समाख्या एव अलमिति ख्यापयति** - श्रीरित्येव च नाम त**इति ।** श्रयन्तीं श्रीयमाणां च श्रृण्वतीं श्रृणतीमपि । श्रृणाति निखिलं दोषं श्रृणाति

---

பற்றிக் கேட்பானேன்!' என்கிறார், **ब्रह्मेशादि सुरव्रजः सदयितः त्वद्दास दासीगणः।** सुरव्रजः, गणः என்றதால், 'இவர்கள் ஈச்வரர் களோ' என ஸந்தேஹிக்கும்[12] இருவரைச் சொல்லி, இவர்களும் அக்நி- இந்த்ரனுக்கு ஸமமாக தேவகணத்தைச் சேர்ந்தவர்களென்றார். सदयितः என்று சொன்னபோதும், பொருத்தமாவதால் दासी என்பது, அவர்களுடைய பத்நிகளைக் குறிக்கும்.

'எண்பெருக்கந்நலத்து ஒண்பொருள்' என்று அர்த்தத்துக்கு முன் शब्दத்தைச் சொன்னதுபோல், பெருமைகளைச் சொன்ன பிறகு, பெயரைச் சொல்கிறார். **श्रीरित्येव च नाम ते -** 'வேத ப்ரமாணங்கள் இருக்கட்டும்; असाधारणமான உன் திருநாமமே பெருமைகளைக் குறிக்கவல்லது' என்கிறார்,

---

*12. एतौ तौ विबुधश्रेष्ठौ प्रसाद क्रोधजौ स्मृतौ। तदा दर्शित पन्थानौ सृष्टि संहारकारकौ / (பார.சாந்தி 350-19) ' பகவானின் ஸந்தோஷ- கோபத்தாலுண்டான தேவச்ரேஷ்டர்களான பிரமன்-சிவன் என்ற இவ்விருவர்களும், அவனால் காட்டப்பட்ட வழியாக, படைத்தல்-அழித்தலைச் செய்கிறார்கள்.'*

च गुणैर्जगत् । श्रीयते चाखिलैर्नित्यं श्रयते च परं पदम् **इत्यादि निरुक्तिः इह अभिप्रेता ।** निस्सङ्कल्पा निराश्रया **इति नाम तु** श्रयते च परं पदं **इत्यादि अविरोधेन नेयम् ।** अकळङ्का अमृता धारा **इति पूर्वोक्त अनुसाराच्च । अमृतो हि परमात्मा, तदाधारा चेयम् । अत एव हि सोऽपि श्रीनिवासः, श्रीधर इति च समाख्यायते । उक्तं च श्रीसात्वते** यतोऽहमाश्रयश्चास्या मूर्तिर्मम

---

ஸ்ரீ சப்தத்துக்கு நிருக்தியில் பல யோஜனைகள் சொல்லப்பட்டன [13]. निस्सङ्कल्पा, निराश्रया (ஸங்கல்பம்/ஆதாரம் இல்லாதவள்) என்ற பெயர்களுக்கோ, "தான் பகவானை அடை கிறாள்" போன்ற ப்ரமாணங்களுக்கு முரண்படாமல் பொருள் சொல்லவேணும்; ஏனெனில், இதற்கு முன்பு சொன்ன अकळङ्का- अमृताधारा (அழுக்கற்றவள்-பகவானை ஆதாரமாக உடையவள்) என்பவைகளுக்குப் பொருந்தவேணுமே! இதனா லன்றோ அவனும் ஸ்ரீநிவாஸன்/ ஸ்ரீதரன் என்று அழைக்கப் படுகிறான். सात्वत संहिதையும், यतोऽहं आश्रयश्चास्या मूर्तिर्मम तदात्मिका (எதனால் நான் இவளுக்கு ஆதாரமோ, அப்படியே என் சரீரமும் அவளையே ஸ்வரூபமாக உடையது) என்கிறது.

---

*13-श्रयन्तीं श्रीयमाणाञ्च श्रृण्वतीं श्रृणतीमपि -(அஹிர் 21.8) தான் எம்பெருமானை அடைபவள். பிறரால் அடையப்படுபவள்; நம் தீனக்குரலைக் கேட்பவள்; தோஷங்களை ஒழிப்பவள்; -श्रृणाति निखिलं दोषं श्रृणाति निखिलं जगत् । श्रीयते चाखिलैर्नित्यं श्रयते च परंपदम् (அஹிர் 51.62) எல்லா தோஷங்களையும் போக்குகிறாள்; நல்ல குணங்களை உண்டாக்குகிறாள்; எல்லோராலும் எப்போதும் அடையப்படுகிறாள்; தான் எம்பெருமானை அடைகிறாள்*

तदात्मिका **इति। यन्निवेशात् सर्वत्र प्राशस्त्यधीः, सैव हि ते समाख्येति** एव**कार अभिप्रायः । निर्दोष मङ्गळगुणाकरत्व ज्ञापनाय** भगवती**त्युक्तिः ।**

-------------------------------------------------------------

**एव -** ' எந்த ஸ்ரீ என்ற பதத்தைச் சேர்ப்பதால் எல்லா வஸ்துக்களிடத்தும் 'இது மேலானது' என்ற எண்ணம் ஏற்படுகிறதோ, அதுவே உன் பெயரன்றோ!' என்கிறது இந்த अवधारणम्.

**भगवति** -दोषமற்ற मङ्गळगुणरूபையானதை சொல்கிறது .[14]

---

*14-मैत्रेय भगवच्छब्दः सर्वकारणकारणे। संभर्तेति तथा भर्ता भकारोऽर्थ द्वयान्वितः ।। नेता गमयिता स्रष्टा गकारार्थः तथामुने । ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसः श्रियः । ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इतीरणा । वसन्ति तत्र भूतानि भूतात्मन्यखिलात्मनि । स च भूतेष्वशेषेषु वकारार्थः ततोऽव्ययः। ज्ञानशक्तिबलैश्वर्य वीर्यतेजांस्यशेषतः । भगवच्छब्दवाच्यानि विना हेयैर्गुणादिभिः । एवमेष महा शब्दो मैत्रेय भगवानिति ।परमब्रह्मभूतस्य वासुदेवस्य नान्यगः। तत्र पूज्यपदार्थोक्ति परिभाषा समन्वितः । शब्दोऽयं नोपचारेण त्वन्यत्र ह्युपचारतः ।*

*( வி.பு 6-5-72...78) மைத்ரேயரே! பகவான் எனும் சப்தம் எல்லா காரணங்களுக்கும் காரணபூதனான ஸர்வேச்வரன் விஷயத்தில் சொல்லப்படுகிறது. ப்ரக்ருதியை, கார்யதசை அடையச் செய்பவன். ஸ்வாமி என்ற இரண்டு அர்த்தங்களுடன் கூடியது 'ப' காரம். அப்படியே ரக்ஷிப்பவன், அழிப்பவன் உண்டாக்குபவன் என்பது 'க'காரப் பொருள். ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞானம், வைராக்யம் என்ற ஆறு குணங்களும் 'பக' என்பதால் குறிக்கப்படுகின்றன. பூதங்களை சரீரமாகவும், தான் ஆத்மாவாகவுமுள்ள அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன; அவனும் எல்லாபூதங்களிலும் வஸிக்கிறான்.*

ஆக அழிவற்ற பகவான், 'வ'காரப் பொருளாகிறான். குற்ற முள்ள முக்குணங்களோடு சேராத 'ஜ்ஞானம், சக்தி பலம், ஐச் வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் குணங்கள் எல்லாம், 'பகவான்' எனும் சப்தத்தினால் சொல்லப்படுகின்றன. இம்மஹா சப்தம், பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரித்தானது. வேறு ஒருவர்க்குமல்ல. 'பூஜிக்கத்தக்க பொருளைக் குறிப்பது', என்னும் பரிபாஷையுடன் கூடிய இது, அவன் விஷயத்தில் மரியாதைக்காகச் சொல்லப்படுவதில்லை. மற்றவர் விஷயத்தில் தான் உபசாரமாகும்.

-इति विविधमजस्य यस्य रूपं प्रकृतिपरात्ममयं सनातनस्य । प्रदिशतु भगवानशेषपुंसां हरिरपजन्म जराधिकां स सिद्धिम् ।। (வி.பு. 6-8-64) 'பிறப்பற்றவனும், பழமையானவனுமான எந்த விஷ்ணுவுக்கு பலவிதமான ப்ரக்ருதி, திவ்யமங்கள விக்ரஹம், ஆத்மஸ்வரூ பம் ஆகியவை சரீரங்களாக இருக்கின்றனவோ அந்த பகவான் ஹரி, எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு-மூப்புகளைப் போக்கடிக்கும் மோக்ஷஸித்தியை அருள்வானாக.' -महत्यापदि संप्राप्ते स्मर्तव्यो भगवान् हरिः - 'பேராபத்துக் காலத் தில் பகவானான ஹரியை நினை'.

-मोदते भगवान् भूतैः बालः क्रीडनकैरिव - (பார. ஸபா.40-78) பகவான், சிறுவன் விளையாட்டுப் பொருளுடன் விளையாடு வது போல், பூதங்களுடன் மகிழ்கிறான்'
-ईश्वरीं सर्वभूतानां - (ஸ்ரீஸூக்தம். 9) 'எல்லா பூதங்களுக்கும் ஈச்வரியுமான'

-अस्येशाना जगतो विष्णुपत्नी - (நீளா ஸூ, தைத்தரீ. 4-4-12) 'இவ்வுலகிற்கெல்லாம் ஸ்வாமினியாகவும் விஷ்ணுவுக்குப் பத்னியாகவும் இருப்பவள்'

**ईदृश अतिशयशालिन्याः श्रियःयथावत् स्तोतुमशक्यतां आह -** ब्रूमः कथं त्वा**मिति ।** त्वां - **उक्त प्रक्रियया विष्णुपत्नी- त्वेन तदितर सर्वशेषित्वेन तदुचित नामधेयादि योगेन च प्रसिद्धां** न ते वर्णयितुं शक्ता गुणान् जिह्वाऽपि वेधसः **इति चतुर्मुखे- नापि स्तोतुं अशक्यतयोक्तां चेति भावः ।** वयं -**परिमित ज्ञान शक्तयः ।** ब्रह्माद्याः सकलादेवा मुनयश्च तपोधनाः। त्वां स्तोतुमपि नेशानाः त्वत्प्रसादलवं विना **इति वचनानुसारेण ब्रह्मादीनां स्वस्य च अत्र अविशेष व्यञ्जनाय बहुवचनम्।** कथं ब्रूमः -**कार्त्स्न्येन त्वद्वर्णनं अशक्यं, परिच्छिद्य वर्णनं तु अनुचितं इति भावः।**

---

இனி, இப்படிப் புகழ்படைத்த பிராட்டியை உள்ளபடிப் புகழ வேதங்களாலும்[15] முடியாமையைக் கூறுகிறார், **ब्रूमः कथं त्वां** என்று. त्वां என்பதால், கீழ்ச்சொன்னபடி -விஷ்ணுவுக்கு பத்நி, அவனையொழிந்த மற்றவைக்குशेषि, இவைக்குப் பொருத் தமான பெயர்கொண்டமை, என- புகழ்பெற்ற பிராட்டியின் மேன்மை பிரமனாலும் स्तोत्रं செய்ய இயலாமை சொல்லிற்று[16].

**वयं** என்று, அளவுபடுத்திய ज्ञान शक्त्यादिகளை நாம் கொண்டமை சொல்லிற்று. மேலும், பன்மையில் சொன்னதால், 'இப்படி स्तोत्रं செய்ய இயலாத தன்மையில், தனக்கும் ब्रह्मादि களுக்கும் வித்யாஸமின்மையைச் சொல்கிறார். कथंब्रूमः என்ற தால், முழுமையாக वर्णिக்க முடியாது என்பதும், ஓரளவு வர்ணிப் பதும் ஏற்றதாகாது என்பதும் குறிக்கப்பட்டது.

---

*15. अनन्ता वै वेदाः - 'வேதங்கள் அளவற்றவை'*

*16. -यतो वाचो निवर्तन्ते - 'மனதும் வாக்கும் எந்த ப்ரம்ஹத்தை அளவிடமுடியாமல் திரும்புகின்றனவோ'*

-न ते वर्णयितुं शक्ता गुणान् जिह्वापि वेधसः । -(வி.பு. 1-9-133) 'உன் குணங்களை வர்ணிக்க ப்ரஹ்மா நாக்கினாலும் முடியாது'

-ब्रह्माद्याः सकलादेवाः मुनयश्च तपोधनाः । त्वां स्तोतुमपि नेशानः त्वत्प्रसाद लवं विना ।। 'ப்ரஹ்மா முதலா தேவர்கள், தவவலிமை மிகுந்த முநிவர்கள் யாவருமே உன்னுடைய அருளின் துளி அம்சமின்றி, உன்னை புகழ்வதற்குக்கூட சக்தியற்றவர்கள்'.

-यस्यायुतायुताशांशे विश्वशक्तिरियं स्थिता। परब्रह्म स्वरूपस्य प्रणमाम्यस्तमव्ययम्। - (வி.பு 1-9-53) 'பரப்ரஹ்மஸ்வரூபியான எவனுடைய பல்லாயிரத்தில் ஒரு பாகத்தில் உலகமாகிறசக்தி நிலைக்கிறதோ, குறைவற்றவனான அவனை வணங்குகிறேன்.'

-समस्त कल्याण गुणात्मकोऽसौ स्वशक्ति लेशोद्धृत भूतसर्गः । इच्छा गृहीताभिमतोरुदेहः संसाधिताऽशेष जगद्धितोऽसौ ।। - (விபு. 6-5-84) 'இந்த பகவான் எல்லா கல்யாண குணங்களையும் இயற்கையாகவே உடையவன்; தன்னுடைய சக்தியில் ஒரு சிறிய பகுதியினாலேயே தரிக்கப்பட்ட பூதங்களை உடையவன்; இச்சையினாலேயே எடுக்கப்பட்ட, இஷ்டமான பல தேஹங்களை உடையவன்; எல்லா உலகுக்கும் நன்மை செய்பவன்'

-मनसैव जगत्सृष्टिं संहारञ्च करोति यः । तस्यारिपक्षक्षपणे कियानुद्यम विस्तरः। - ( வி.பு. 5-22-15) 'எவன் மனதினாலேயே உலகத்தைப் படைத்தல்-அழித்தல் செய்கிறானோ, அவனுக்கு எதிரிகளைக்கொல்வதில் என்ன பெருமுயற்சி வேண்டும்?'

-पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च - (ச்வே.6) 'இந்த பரமாத்மாவுக்கு பலவிதமும் மேலானதுமான சக்தியும் இயற்கையான ஜ்ஞானமும், பலமும், (ஸ்ருஷ்டி முதலான) செயல்களும் உண்டென்று அறியப்படுகிறது'.

-एको ह वै नारायण आसीत् । न ब्रह्मा । न ईशानः । नेमे द्यावा पृथिवी । स एकाकी न रमेत । (மஹோபனிஷத்) 'நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனும் சிவனும் ஆகாயமும் பூமியும்

'இந்த श्लोकத்தால், कठवल्ल्युपनिषत् सिद्धமான द्वयத்தில் श्रीशब्दத்தை सार्थமாக अनुसन्धिத்தருளினார்,' என்கிறார் ஆச்சான்.

[स्वामिदेशिकன் व्याख्यानத்தில் இந்த प्रकरणத்தில், श्रीயைப் பற்றியதான மற்றவர்களின் பலவித தவறான கருத்துக்களைப் பதிநான்கு வகையாகப் பிரித்து, पूर्वपक्षங்களுக்கு खण्डनமும், அவர்கள் प्रमाणங்களாகக் கையாண்ட वाक्यங்களுக்கு समाधानமும் ஸாதிக்கிறார் ; இதன் சுருக்கத்தை அட்டவணையில் காணலாம். அவற்றின் விளக்கத்தையும் மேலே பார்ப்போம்.]

---

*இல்லை; அவன் ஒருவனாய் ஆநந்தம் அனுபவிப்பதில்லை.'*

*-एष सर्वभूतान्तरात्मा अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः । - (ஸுபாலோப 7) எல்லா பூதங்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவனும், தோஷமற்றவனும், ஸ்ரீவைகுண்டத்தில் வஸிப்பவனும் தேவனுமான நாராயணன் ஒருவனே.'*

*-தனக்கும் தன் தன்மையறிவரியான் - (திருவாய். 8-4-6)*

*-अपूर्वनानारसभावनिर्भर प्रबद्धयामुग्ध विदग्धलीलया - (ஸ்.ர 44) 'க்ஷணந்தோறும் புதிதாயிருக்கும் பலவகை ரஸங்களாலும் நெருங்கிச் சேர்ந்திருப்பதும் . . '*

*-इति प्रसादयामासुस्ते सुराः तमधोक्षजम् । भूतार्थ व्याहृतिः सा हि न स्तुतिः परमेष्ठिनः ।- (ரகுவம் 10-33) 'இந்த தேவர்கள் இந்த்ரியங்களால் அறியமுடியாதவனான எம்பெருமானை இம்மாதிரி உகப்பித்தார்கள். பரமபதத்தில் வாழும் அவன் விஷயத்தில் அது உண்மையையே சொல்லுவதன்றோ! (இல்லாதவிஷயத்தை ஏறிட்டுச் சொல்லும்) ஸ்தோத்ரமல்லவே.'*

*-पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम । कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति- (ராமா 6-116-44) 'வானர! பாபிகளாயினும் புண்யம் செய்தவராயினும், கொல்லத்தகுந்தவர்களாயினும், அவனிடத்தில் குணவானானவன் கருணை காட்டவேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே!'*

அட்டவணை

**श्री तत्व-विषय पूर्वपक्षங்களும் स्वामिயின் खण्डनமும்**

| पूर्वपक्षங்கள் | खण्डनं |
| --- | --- |
| 1 & 2 *श्री என்பது अचेतनं* | இல்லை; அவள் चेतनமே என்று प्रमाणங்கள் நிரூபிக்கின்றன. |
| 3. *श्री, चेतनமானாலும், ब्रह्मமேश्रीயாக இருக்கிறது.* | श्रीக்கே தனிப்பட்ட नित्यமான चेतनत्वமுண்டென்று प्रमाणங்கள் நிரூபிக்கின்றன. |
| 4. *ब्रह्मத்தின் ஒரு பாகமே, தன்னையனுபவிக்க தனியாகश्री என அறிகிறது.* | ब्रह्मத்துக்கு अवयवங்கள் இல்லை ஆக श्री என்பது ब्रह्मத்தின் பாகமாகமுடியாது |
| 5. *விதையிலிருந்தே முளை வந்தாலும், அதை வேறாகச் சொல்வதுபோல் ब्रह्मத்தின் பாகமான श्रीயும் வேறானது* | ब्रह्म-स्वरूपத்துக்கு மாறுதலில்லை என்று प्रमाणங்கள் சொல்வதால், இந்த வாதம் தள்ளப்படுகிறது. |
| 6. *ஒரு कारणத்தால் பிரிக்கப் பட்ட वस्तुவை வேறென்று சொல்வதுபோல் (उपहितांश भेदपक्षं) ब्रह्मத்திலிருந்து பிரிக் கப்பட்டश्रीயும் வேறாகிறாள்.* | अवयवं இல்லாத ब्रह्मத்தை उपाधिயினால் பிரித்ததாகச் சொல்லமுடியாது. |

| **பூர்வபக்ஷங்கள்** | **खण्डनं** |
|---|---|
| 7. *ஶ்ரீ என்பவள், ब्रह्मத்தின் अवतार / स्वरूप மாறுதலே. (सामानाधिकरण्यத்தாலே)* | श्रीக்கு தனிப்பட்ட नित्यமான चेतनत्वமுண்டு/ब्रह्म-स्वरूपத்துக்கு மாறுதல் இல்லையென்று கீழேயே சொல்லப்பட்டது. |
| 8. *प्रमाणங்கள், श्रीயை மற்ற कर्मवश्यர்களோடு சேர்த்துச் சொல்வதால், (अग्र्यप्रायन्यायं) श्रीக்கும் कर்मவश्यதை உண்டு;* -ஆக श्री, ब्रह्मகோடியிலில்லை | श्रीக்கு कर्मवश्यதை கிடையாது என்று स्पष्ट वचनங்கள் உள்ளன. श्लोकத்திலும் कर्मवश्यர்கள் श्रीக்கு அடிமை என்று சொல்லப்பட்டது. |
| 9.*श्रीக்கும் भगवाனுக்கும் विग्रहं ஒன்றே (विग्रह ऐक्यं) என वचनங்கள் உள்ளன* | विग्रह ऐक्यं, இவர்களின் सङ्कल्पத்தினாலும்வரலாம்; ஆக,स्वरूप ऐक्यத்தைக் குறிக்காது. वचनங்களுக்கு, ஒருமித்த எண்ணமுடையவர்கள் என்றே பொருள். |
| 10. *ब्रह्मத்தின் प्रतिबिंबமாயும், அதன் स्वरूपத்தை மறைக்கின்றதுமான மாயையே श्री என்பது.* | ब्रह्मத்திற்கு மறைவே கிடையாது; श्लोकமும், श्री-श्रीपतिயைத் தவிர மற்றவர்களைத்தான் மாயை மறைக்கும் என்கின்றது. |
| 11. *திரையாவது அறிவதற்கு இருபுறத்தும் தடையாவதால் மாயை श्रीயை மறைக்கும்.* | தவறு; श्रीக்கு மாயை அடிமை; மறைவுக்குக் காரணமான कर्मवश्यதை श्रीக்கு இல்லை; |

| **பூர்வபக்ஷங்கள்** | **खण्डनं** |
|---|---|
| 12. *कर्मवश्य*ர்களோடு *श्री*யை யும்(*समानाधिकरणं*) சொன்ன தால்;*श्री*க்கு *कर्मफलं* உண்டு; | समानाधिकरणத்திற்கு, மற்றவற்றை களை विभूतिயாக உடையவள் என்பது (प्रमाणान्तरங்களுக்கு विरोधமில்லாத) கருத்து. |
| 13. *स्त्री अंशं* உள்ளவையே *श्री*யின் *विभूति*; மற்றவை அல்ல. *श्रीपति*க்குத்தான் *सर्वविभूति शेषित्वं* உண்டு. | இந்த பங்கீடு, இருவரின் इच्छै யினால் உண்டான विशेष अभि-मानத்தைத்தான் குறிக்கிறது. |
| 14. *लक्ष्मी-तत्व*த்தை ஒருக் காலும் நிரூபிக்கமுடியாது; சிற்சில விதத்தாலேயன்றி, ஒன்றுவிடாமல் எல்லா விதத்தாலும் நிரூபிக்க முடியாது. | இவ்வளவு விளக்கத்தால் लक्ष्मी-तत्वं நிரூபிக்கப்பட்டது. எல்லா விதத்தாலும் நிரூபிக்க முடியாமல்போவதோ/உபயோக முள்ள பாகத்தை மட்டும் நிரூபிப் பதோ எங்கும் உள்ளதே ! |

[இப்படி, ஸ்ரீயை *மிக अवरतत्वமான अचेतनं* என்று ஆரம் பித்து, பிறகு *"चेतनंதான் ஆனால் ब्रह्मமேதான் / ब्रह्मத்தின் ஒரு பகுதி/ कर्मवश्यதையுள்ள चेतनं/ श्री-श्रीपतिக்கு विग्रह ऐक्यं இருப் பதால் स्वरूपமும் ஒன்றே/ ब्रह्मத்தை மறைக்கும் மாயை/ மாயை க்கு உட்பட்டவள்/ कर्मफलன் உண்டு/ குறிப்பிட்ட विभूतिக்குத் தான் शेषि'* என்று पूर्वपक्षिகள், படிப்படியாக வலுவிழந்து வாதிப்ப தும், கடைசியில் *"ஒன்றுவிடாமல் எல்லா விதத்தாலும் निरूपिக்க முடியாது"* என்பதும், स्वामिदेशिकன் प्रमाण-तर्कங்களைக் கொண்டு அதை உடைப்பதும் ரஸிக்கத்தகுந்தது.]

1) ये पुनराहुः - *श्रीर्नाम भगवतः सर्वकर्तुः अधिष्ठेया प्रकृतिरिति;*

2) ये च *तस्य सत्ता/अहन्ता/प्रभा/शक्ति/विद्या/इच्छा, भोक्तृता आदि रूपेयं; शास्त्रेषु तथातथा व्यपदेश दर्शनात्* इत्याहुः । तेषां तत्रतत्रैव शास्त्रे निर्बाधेन चेतनत्व व्यपदेशेन निरासः। अत्रापि अयमर्थः ते, त्वा**मिति** **युष्मच्छब्देन** **संबोधनेन**

---

(முதல் இரண்டு पक्षங்கள் மொத்தத்தில் சொல்வது: *'ब्रह्मं ஒன்று தான்; ஆக श्री யானவள் अचेतनं / ब्रह्म த்தினுடைய गुणं'* என்று .)

पूर्वपक्षं :

*(1)உலகை படைக்கும் भगवा னால் अधिष्ठेय மான* ***प्रकृति*** *யே, श्री।*

*(2)எம்பெருமானுடைய -* ***सत्ता*** *(உளதாம் தன்மை);* ***अहंता*** *(நான் என்ற தன்மை);* ***प्रभा*** *(ஒளி);* ***शक्ति*** *(திறன்)*; ***विद्या*** *(அறிவு)*; ***इच्छा*** *(ஆசை);* ***भोक्तृता*** *(ஸுகத்தை அநுபவிக்கும் தன்மை) - என* ***शास्त्र****ங்கள் கூறுவதால் இவைகளின் உருவம்தான் श्री என்பது.*

[पूर्वपक्षिகள் சாரும் प्रमाणங்கள் : (Chatusslokibhashyam by Sri U Ve Chettaloor Srivatsankachariar )

-विकार विरहो वीर्यं प्रकृतित्वेऽपि मे सदा (ல.தந். 2-30) -मत्तः प्रक्रियते विश्वं प्रकृतिश्चास्मि कीर्तिता (ல.தந். 4-51); -ज्ञानादि षाड्गुण्य मयी मा प्रोक्ता प्रकृतिः परा (ஸந,ஸம்) -सर्वभावात्मिका लक्ष्मीरहन्ता परं आत्मिका (அஹிர் 3-42) -अहं नारायणी नाम साऽहन्ता वैष्णवी परा (ல.தந். 3-1); -तथैवैका परा शक्तिः श्रीस्तस्य करुणाश्रया (ஸந,ஸம்) -एकैव शक्तिः श्रीस्तस्य द्वितीया परिवर्तते (ஸந,ஸம்) -शक्तिर्नारायणी दिव्या सर्वसिद्धान्त संमता(அஹிர் 3-24) -नायिका सर्वशक्तीनां सर्वलोक महेश्वरी(ல.தந்.13-22) - शक्ति चक्रस्य नायिका; -विद्या सहायवन्तं मां]

**च श्रियः चेतनत्वं उपस्थापयता सूचितः। सत्तादि शब्दाः तु अस्यां भगवतः अन्तरङ्ग विशेषणत्वादि अभिप्रायाः। प्रकृतेः अन्यत्वं तु** ते, यवनिके**त्यनेनापि दर्शितम् । न चास्याः प्रकृति शब्द उपात्ततामात्रेण त्रिगुणद्रव्य तादात्म्यं** वासुदेवः पराप्रकृतिः, प्रकृतिश्चप्रतिज्ञा दृष्टान्त अनुपरोधात् **इत्युक्ते भगवत्यपि प्रसङ्गात्**

---

स्वामि देशिकனின் 7 வகையான खण्डनम् :

1) ஆனால் இப்பक्षங்கள் சாரும் शास्त्रங்களே, தடையேதுமில்லாத வகையில் ஸ்ரீக்குச் चेतनत्वத்தை, विशेषिத்துக் கூறுகின்றன!

2) இந்த முதல் श्लोकத்தில் கையாண்ட 'ते, त्वां' போன்ற உயர் திணைச் சொற்கள்/'भगवति' என்ற விளி ஆகியவை, பிராட்டிக்கு चेतनत्वத்தைக் கூறுகின்றன.

3) सत्ता முதலிய சொற்கள், 'இவள் भगवाனுக்கு अन्तरङ्ग विशेषणं' என்ற கருத்துடையவைதான்.

4) *'ஸ்ரீயானவள் प्रकृतिதான்'* என்றால், 'ते + यवनिका' என்று மாயையை 6-ம் வேற்றுமையில் குறிப்பிடுவானேன்? ते -என்று 'உடையவனையும் (ஸ்ரீயையும்)', यवनिका -என்று 'உடைமையை யும் (प्रकृतिயையும்)' (இலக்கணமுறைப்படி) வெவ்வேறு (முறை யே 6-ம்/1-ம்) வேற்றுமையால் சொன்னதால், இரண்டும் வெவ் வேறு பொருள்கள் என்றுதானே தெரிகிறது!

5) प्रकृति என்ற சொல்லை மட்டும் வைத்து, *இவளை त्रिगुण द्रव्य प्रकृति* என்றால், அப்படியே 'वासुदेवः पराप्रकृतिः (श्रीसूक्त. भा 13-14 -பகவானே மேலான प्रकृति) प्रकृतिश्च प्रतिज्ञा-दृष्टान्त अनुपरोधात्' (உபாதான காரணமும் ப்ரஹ்மம்தான்; ப்ரதிஜ்ஞை/உதாரணம் இவைகளுக்கு விரோதம் இல்லாமைக்காக- ब्र.सू 1-4-23) என்பதா லும் वासुदेवனும் प्रकृतिஎன்று சொல்லவேண்டிவருமே!

जगदुत्पादिका शक्तिः तव प्रकृतिरिष्यते; सैव नाम सहस्रैस्तु लक्ष्मीः श्रीरिति कीर्त्यते; मूलप्रकृतिः ईशानी; प्रकृतेः पुरुषाच्च अन्यस्तृतीयो नैव विद्यते **इत्यादीनि ब्रह्मवचनान्यपि लक्ष्मी नारायणयोः प्रकृति- पुरुषरूप विभक्त विभूति विशेष अभिप्रायाणि ।**

**प्रश्रितमात्रपरः वा अत्र** दान्त **शब्दः । तावन्मात्रेऽपि हि तस्या विशेष अभिमानः तयैव उक्तः** धर्म नित्ये महाबुद्धौ ब्रह्मण्ये सत्यवादिनि । प्रश्रिते दानशीले च सदैव निवसाम्यहम् **इति । एवं विधश्च दयाविशेषः** करुणा(स्रा)ग्रा नतमुखी **इति अस्याः समाख्य यैव ख्यापितः । अष्टोत्तर सहस्र(शत)नामसु च पठ्यते** करुणां वेदमातरं **इति । करुणा प्रचुरतया असौ करुणात्वोक्तिः ।**

------------------------------------------------------------

दान्त शब्दத்திற்கு, 'வணக்கமுடையவன்" என்று மட்டும்தான் பொருள், என்றும் சொல்லலாம். இப்படி 'வணக்கமுடையவ' னிடத்தில்தானே அவளுக்கு அதிகமான अभिमानம் உள்ளது என்று அவளாலேயே கூறப்பட்டது.[29] இப்படிப்பட்ட தயைமிகுதி யினாலே, அவள் பெயராகவே, 'करुणाग्रा नतमुखीं [30] 'என்று சொல்லப்பட்டது. अष्टोत्तर-सहस्रनाम स्तोत्रங்களும், 'करुणां वेद मातरं [31]' என்றன. கருணை மிகுதியினால், இவள் 'கருணை' என்ற சொல்லாலேயே கூறப்பட்டாள்.

दान्ते! என்பதை விளியாகக்கொண்டு, 'करुणोज्ज्वल संवर्द्धितैயாயிருக்கிற கற்பகக் கொடியே!' என பெரியவாச்சான் பிள்ளையும்; 'करुणामृत संवर्द्धितैயான கற்பகக்கொடியே! ' என்று ஆச்சானும் வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள்.

*29. - धर्मनित्ये महाबुद्धौ ब्रह्मण्ये सत्यवादिनि । प्रश्रिते दानशीले च सदैव निवसाम्यहम् ।।(ம.ல.ஸம்)- தர்மத்தில் நிலை நிற்பவன், அதிக புத்திமான், ப்ராம்மணர்களை தேவதைகளாக பாவிப்ப வன், உண்மை பேசுபவன், வணக்கமுடையவன், தானம் செய்பவன் -இவரிடத்து, நான் எப்போதும் வஸிக்கிறேன்.*

*30. -(ல.ஸஹ) -தயையினால் முன் வளைந்த முகமுடையவள்*

*31. -கருணா ரூபியாயும் வேதங்களுக்குத் தாயாகவும் இருக்கிற*

पारम्यापह्नवः पत्यौ बाह्यानां मानबाधितः ।
इति ख्यापयितुं श्रीशं श्रीदृष्टान्तमिहाब्रवीत् ।।

***अथ स्यात्*** *आनीतवातं स्वधया तदेकं* ***इति प्रळय दशायां स्वधा शब्दवाच्यया कयाचित् परस्य ब्रह्मणः अननं श्रूयते। सा चात्र*** *स्वधा त्वं लोकपावनी* ***इति पुराणोक्तेः । महाभारते च श्रीवासव संवादे*** *अहं स्वाहा स्वधा चैव* ***इति स्वयमेव उक्तत्वात् औचित्याच्च लक्ष्मीरेव । अतः तदधीन प्राणनत्वं ब्रह्मण*** **इति,**

---

இந்த ச்லோகத்தில், ஸ்ரீக்கு உவமையாக श्रियःपतिயைச் சொன்னது, "வேதவிரோதிகள், பகவான் பரதேவதையல்ல என்று சொல்வது, ப்ரமாணவிரோதமானது" என்பதைக் காட்டவே.

இப்படியிருக்க, பிறா்எழுப்பும் पूर्वपक्षமும், स्वामिदेशिकன் खण्डनமும் இவ்வாறு:

पूर्वपक्षं :- *'प्रळयदशै யில், 'स्वधा' என்னும் पद த்தால் சொன்ன ஒரு वस्तु வினால், परब्रह्मं ப்ராணனோடிருக்கிறது,' என்று வேதம் சொல்கிறது.*[32] *विष्णु पुराण த்தில், 'स्वधा त्वं लोकपावनी' என்றும்; महाभारत த்தில் இந்த்ரனுக்கு உபதேசிக்கும்போது லக்ஷ்மியாலேயே, 'अहं स्वाहा स्वधा चैव' என்றும் சொல்லப்பட்டிருப்பதால், 'स्वधा' शब्दं லக்ஷ்மியைக் குறிக்கிறது என ஆகிறது.*

*ஆக, परब्रह्मं, அவளுக்கு வசப்பட்ட ப்ராணனோடுதான் இருக்கிறது என்று தெளிகிறது.*

---

*32. -आनीदवातं स्वधया तदेकम्*

**तत्र । स्वाधीन सर्वसत्ताकस्य तस्य** ***अन्य अधीन प्राणनत्व*** **असंभवात् ।** *स्वधा* ***शब्दस्य अत्र प्रयोगदर्शनमात्रेण लक्ष्मी विषयत्व कल्पना*****दपि 'स्वस्मिन् धीयत' इति व्युत्पत्या स्व सत्ताविषयत्वस्य कल्पयितुं युक्तत्वात् । स्वकीयं विश्वधारण सामर्थ्यमेव वा** स्वधा **। तथा** श्रेष्ठश्चे**त्यत्र भाष्यं** - आनीदवातं **इति तु न जैवं श्रेष्ठं प्राणनं अभिप्रेत्य उच्यते । अपि तु परस्य ब्रह्मण एकस्यैव विद्यमानत्वं उच्यते, इति । अत्र अनन्याधीन सत्ताकत्वमेव ह्यभिप्रेतम् । अस्तु वा** स्वध**येति पदं लक्ष्मी विषयम् । तथाऽपि सहयोग विवक्षैव अत्र युक्ता ।**

---

स्वामि देशिकனின் खण्डनं :-

இது ஸரியல்ல. எல்லா वस्तुக்களின் स्थितिயை, தனக்கு अधीनமாக உடைய परब्रह्मं, *மற்றொன்றுக்கு அடங்கிய ப்ராணனை உடையதாக இருக்கிறது,* என்பது பொருந்தாது. ஆகையால், *'स्वधा' என்ற शब्दप्रयोगத்தை வைத்து லக்ஷ்மியைக் குறிக்கிறது* என अर्थं சொல்வதை விட, இங்கு परब्रह्मத்துக்கு 'स्वस्मिन् धीयते' (தன்னாலேயே இருக்கிறது-स्वाधीनமானது) என்ற கல்பனம் பொருத்தமாகும். அல்லது, 'தன்னுடைய, ப்ரபஞ்சத்தைத் தாங்கு கிற சக்தியே स्वधा' என்னலாம். இதையே, 'श्रेष्ठश्च' என்னுமிட த்தில் (भाष्यத்தில்) 'आनीद वातं என்று ஜீவர்களுக்கு முக்யமான ப்ராணவாயுவை சொல்லவில்லை; மாறாக, परब्रह्मं ஒன்றினுடைய **இருக்கும்தன்மை** கூறப்படுகிறது,' எனப்பட்டது. ஆக, भगवा னின் अनन्याधीन सत्ताकत्वமே (வேறொன்றுக்கும் வசப்படாத தன் னுடைய ஸ்திதி) இதன் கருத்து. அப்படியில்லை; *'स्वधा' என்ற शब्दं லக்ஷ்மியைத்தான் குறிக்கிறது* என்று வைத்துக்கொண்டா லும், '**லக்ஷ்மியோடுகூட**' என்று பொருள் கொள்வது உசிதம்.

**यथा महाभारते** कृत्वा मत्स्थानि भूतानि चराणि स्थावराणि च । एकाकी विद्यया सार्धं विहरिष्ये द्विजोत्तम **इति । *ननु*** *ततो भूयो जगत्सृष्टिं करिष्यामीह विद्यया* **इति *वाक्यशेषेण औचित्यात् तत्र विद्या शब्दः प्रकृति विषयः स्यात्।* भवत्वेवम् । तथाऽपि प्रस्तुत सहोक्तिमात्र संभव उदाहरणं इदं युज्यत एव । यद्वा** तेनेयं स च धर्मात्मा मुहूर्तमपि जीवति **इतिवत्** स्वधया आनीदि**ति प्रेमपारतन्त्र्ये तात्पर्यम् ।**

---

மஹாபாரதத்திலும், 'कृत्वा मत्स्थानि भूतानि चराणि स्थावराणि च। एकाकी विद्यया सार्धं विहरिष्ये द्विजोत्तम [33]।। என்றுள்ளது.

पूर्वपक्षं :- *இது பொருத்தமான प्रमाणமல்ல. 'ततो भूयो जगत्सृष्टिं करिष्यामीह विद्यया [34]।' என்பது இங்கு மேல் வாக்யம்; இங்கு विद्या என்ற पदं, பொருத்தமாகவும் இருப்பதால், प्रकृति யைத்தான் குறிக்கிறதே தவிர. லக்ஷ்மியை அல்ல.*

समाधानं :- ஸரி, கீழேசொன்ன 'ஒரு வஸ்துவுடன் இருத்தல்' என்பதற்குமட்டும் இது प्रमाणமென்பது பொருத்தம் தானே. மேலும், 'तेनेयं स च धर्मात्मा मुहूर्तमपि जीवति [35]' என்று சொன்னதுபோல, स्वधा என்ற லக்ஷ்மியினால் ப்ராணனோடிருக் கிறது என்று, 'அவ்வளவு ப்ரீதிக்கு வசப்பட்டதைச் சொல்கிறது.'

---

*33. -ஜங்கம-ஸ்தாவர ப்ராணிகளை, என்னிடத்தில் இருப்பவை யாகச் செய்து, ஒருவனாக வித்யையோடு விளையாடுவேன்.*

*34. -பிறகு, மறுபடியும் ப்ரக்ருதி (வித்யை)யினால் லோக ச்ருஷ்டியை செய்யப்போகிறேன்.*

*35. -(ராமா) (தங்கள் மனது ஒருவர்க்கொருவரிடத்தில் இருப்ப தால்) ஸீதையும் தர்மாத்மா ராமனும் க்ஷணமும் வாழ்கிறார்கள்.*

***अथ स्यात्*** *मेधा श्रद्धा सरस्वती ; अहं श्रद्धा च मेधाच* **इति स्मृति उपबृंहितया** *श्रद्धया देवो देवत्वमश्नुते* **इत्या श्रुत्या पत्यधीन उत्कर्षत्वं परस्य देवस्य प्रतीयते** **इति । तदपि न चोद्यम् । स्वतस्सिद्ध अतिशयस्य भास्करस्य प्रभान्वयेन एव** श्रियः श्रीश्च भवेत् **इत्युक्तस्य भगवतः स्वपत्न्या अपि अतिशया- न्तरे दोष अभावात् ।** अभिरूप एव आभरणेनापि द्योतमानत्वं अश्नुते

---

*पूर्वपक्षं :- 'வேறொன்றுக்கும் (லக்ஷ்மிக்கும்) வசப்படாத தன் னுடைய ஸ்திதியை உடையவன் பகவான்' என்று கீழே ஸ்தாபித்தீர். அப்படியானால் அவனுக்கு लक्ष्मीसंबन्धं தேவை யில்லை என்றுதானே ஆகிறது. ஆனால் प्रमाणங்களால், 'பரதேவதையாகிய பகவான், பத்நியினால் உண்டாகிய மேன்மையை உடையவன் [36]' என்பது ஏற்படுகிறதே?*

समाधानं :- இந்த प्रमाणங்களின் तात्पर्यं, 'லக்ஷ்மியின் சேர்க்கையினால் இவனுக்கு மேன்மை உண்டாகாமல் இருப்ப தில்லை' என்பதே.இயல்பாகவே மேன்மையுடைய ஸூர்யனுக்கு, कान्तिயின் ஸம்பந்தம் போன்று, 'श्रियः श्रीश्च भवेत् [37]' என்று கூறப்பட்ட பகவானுக்கு, தன்னுடைய பத்நியினாலும் மற்றொரு சிறப்பு இருப்பதால் குற்றம் ஒன்றுமில்லை. மேலும், அழகா யிருப்பவனே, ஆபரணத்தினாலும் ப்ரகாசம் அடைவதில்லையா!

---

*36. -मेधा श्रद्धा सरस्वती -மேதை, ச்ரத்தை, ஸரஸ்வதீ (இவை லக்ஷ்மியின் பெயர்கள்)*

*- अहं श्रद्धा च मेधा च -நானே ச்ரத்தையும், மேதையும்*

*श्रद्धया देवो देवत्वमश्नुते - ச்ரத்தையினால் பகவான், தேவனா யிருப்பதை (லீலா ரஸ அநுபவத்தை) அடைகிறான்.*

*37. -(ராமா) திருவுக்கும் திருவானவன்*

**इत्यादिषु इव अयोगव्यवच्छेदमात्रेण अपि अर्थः उपपत्तौ, बहुप्रमाण विरुद्धस्य अन्ययोग व्यवच्छेदस्य कल्पयितुं अयुक्त- त्वात् । देवत्वं च निष्कृष्यमाणं देवन संबन्ध एव** कृत्तद्धित समासेषु संबन्धाभिधानं त्वतलौ **इति शाब्दोक्तेः । तच्च देवनं विहरणादिरूपं स्ववल्लभा सहितस्यैव परस्य देवस्य भवतीति सुस्थोऽयं पन्थाः । आहुश्च** यस्या वीक्ष्य मुखं ; अङ्गीकारिभिः आलोकैः ; क्रीडसि श्री समक्षं **इत्यादि । एवं आप्तप्रणीतानि अन्यानि अपि कानिचित् स्तुति वाक्यानि प्रमाणानां स्व वाक्यान्तराणां च अविरोधेन स्थाप्यानि ।**

---

இப்படி अयोगव्यवच्छेदமாக (லக்ஷ்மியோடு संबन्धமில்லாமலில்லை என்று) சொல்லலாமே! இதைவிட்டு, प्रमाणங்களுக்கு विरोधமாகவும், अन्ययोगव्यवच्छेदமாக (भगवाனுடைய स्वातन्त्र्यத்தை நிலை நாட்டுவதாக எண்ணி லக்ஷ்மியோடு சேர்க்காதவாறு) கற்பனை செய்வது பொருந்தாது. மேலும், உதாஹரித்த देवत्वं என்பது, விளையாட்டு உடையவனாயிருக்கையே; இலக்கண மரபின்படி कृत्-तद्धित-समासங்கள் संबन्धத்தைக்குறிப்பன; அவ்விளையாட்டு, 'தன் பத்நியோடு கூடிய பகவானுக்கே' என்று கூறுவதே சிறந்த வழி. பெரியோர்களும் அப்படியே கூறுவர்.[38] இதுபோல் आप्त वाक्यங்கள், स्तोत्रங்கள், प्रमाणங்கள், தங்கள் மற்றவாக்யங்கள் இவற்றிற்கு விரோதமில்லாமல் பொருள் கூறவேண்டும்.

---

*38. -यस्या वीक्ष्य मुखं (ஸ்ரீ ஸ்த) -எவள் முகத்தைப் பார்த்து (லோக ச்ருஷ்டி-ஸம்ஹாரம் இவற்றைச் செய்கிறானோ)*
*-अङ्गीकारिभिः आलोकैः (ஸ்ரீ குண)-அங்கீகரிக்கிற பார்வையால்*
*-क्रीडसि श्रीसमक्षं (ஸ்ரீர.ஸ்) -லக்ஷ்மியின் முன் விளையாடுகிறீர்*

**यानि च ब्राह्मे पुराणि** सर्वातिशायिनी प्रीतिः ; सर्वोत्कृष्टा सर्वमयी ; अनौपम्या निर्विकल्पा **इत्यादीनि लक्ष्मी नामानि तान्यपि** न तत्समश्च अभ्यधिकश्च दृश्यते ; यस्मात् परं नापरमस्ति किञ्चित् ; तमीश्वराणां परमं महेश्वरं; क्षरात्मानावीशते देव एकः ; एक इद् राजा जगतो बभूव ; शास्ता चराचरस्यैकः ; एकः शास्ता न द्वितीयोऽस्ति शास्ता ; शास्ता विष्णुः अशेषस्य **इत्यादि प्रमाणगण अनुसारेण भगवद् व्यतिरिक्त सर्वापेक्षया तन्महिष्याः प्रकर्षं विवक्षन्ति ।**

---------------------------------------------------------------

पूर्वपक्षं :- *அப்படியானால், ब्राह्म पुराणத்தில், 'எல்லாவற்றை யும்விட மேம்பட்டவள்' என்றர்த்தமுள்ள அநேக பெயர்கள், லக்ஷ்மிக்கு சொல்லப்பட்டிருப்பன [39] विरोधिக்காதா ?*

समाधानं :- वेदத்தில் भगवाனைப்பற்றிச் சொல்லியிருப்பதை அநுஸரித்து,[40] இவற்றிற்கு, "பகவானையொழிந்த மற்றெல்லா வஸ்துக்களையும்விட, அவன் பத்நிக்கு மேன்மை சொல்வதில் நோக்கு" என்று கொள்ளவேண்டும்.

---

*39. -सर्वातिशायिनी प्रीतिः -எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ப்ரீதி;*
*-सर्वोत्कृष्टा सर्वमयी- எல்லாவற்றையும்விட மேற்பட்டவள்; எல்லா வஸ்து ஸ்வரூபி*
*अनौपम्या निर्विकल्पा - ஸமானமில்லாதவள்; பேதமில்லாதவள்;*
*40. -न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते -அந்த பரமாத்மாவுக்கு ஸமமான-மேற்பட்டவன் இல்லை.*
*-यस्मात्परं नापरमस्ति किञ्चित् -அந்த பகவானைவிட வேறு பரவஸ்து ஒன்றுமில்லை.*
*-तमीश्वराणां परमं महेश्वरं -ஈச்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேச்வரனாகிய பகவானை*

**तथा सति** शक्तिचक्रस्य नायिका **इति तत्रत्योक्तिरपि संगच्छते । शक्ति शब्दोऽपि ह्यत्र विहराख्यकार्य उपयुक्त विशेषणत्व अभिप्रायः पत्नीविषय एव।** अत्यन्त साम्यमपि अस्यां दृष्टान्त स्वरसागतम् । स्थाप्यं नियत निर्बाध पत्नीत्वाद्यविरोधतः ।।

**अत्र** तस्य शक्तिद्वयं तादृक्अमिश्रं भिन्नलक्षणं **इति सात्वतोक्तं**

-------------------------------------------------------------

सनत्कुमारसंहितैயில், 'शक्ति चक्रस्य नायिका [41]' என்று சொன்னதும் இங்கு பொருந்தும். இவ்விடத்தில், शक्ति என்று, 'விளையாடல் கார்யத்திற்கு उपयोग विशेषणமாக இருப்பதை அபிப்ராயத்தில் கொண்டு பத்நியைச் சொல்கிறது. மேலும், 'மிகவும் ஸமமாயிருப்பது' என்று स्वरसமாகச் சொன்ன இடங்களிலும், 'எப்போதுமுள்ள/தடுக்கப்படாத பத்நியாகை' போன்ற प्रमाणங்களுக்கு विरोधமின்றி பொருள்கொள்ள வேண்டும்.

இதைப் போலவே, 'तस्य शक्तिद्वयं तादृक् अमिश्रं भिन्नलक्षणं [42]'

---

*क्षरात्मानावीशते देव एकः -ப்ரக்ருதி, ஜீவாத்மா இவ்விரு வஸ்துக்களையும் அந்த ஒரு தேவனே நியமிக்கிறான்.*
*-एक इद् राजा जगतो बभूव -இவ்வுலகுக்கு ஒரே ராஜாவானான்.*
*-शास्ता चराचरस्यैकः -சராசரங்களை நியமிப்பவன் ஒருவனே*
*-एकः शास्ता न द्वितियोऽस्ति (कश्चित्) शास्ता -ஒருவனே நியமிப்பவன்; வேறில்லை.*
*-शास्ता विष्णुरशेषस्य -விஷ்ணுவே ஸகல வஸ்துவையும் நியமிக்கிறவன்*

*41. -பத்நிகளின் ஸமூஹத்திற்கு யஜமானி.*
*42. -பகவானுக்கு, அவனோடு ஸமமான-கலப்பில்லாத-வெவ்வேறு அடையாளங்களையுடைய இரு பத்நிகள் (உண்டு)*

**देव्याः तादृक्त्वमपि श्रुति-स्मृति-पूर्वापरादि प्रसिद्ध पत्नीत्व आदि अनुगुणं योज्यम्।**

**किञ्च, यथा मुक्तस्य भगवता परमसाम्ये श्रुतिस्मृत्यादि सिद्धेऽपि** जगद्व्यापार वर्जं **इति लक्षणभूतैः आकारैः वैषम्यं स्थाप्यते, तथा इहापि भवति ।** भिन्न लक्षण**मिति च तत्रैव उक्तम् । आहुश्च** पितेव त्वत्प्रेयान् **इत्यारभ्य** माता तदसि नः **इति।**

---

என்று सात्वत संहितैயில் பிராட்டிக்குச் சொன்ன 'ஸமமாயிருக்கை' முதலியவற்றிற்கும், श्रुति-स्मृतिகளில் முன்பின் சொன்னவைகளில் प्रसिद्धமாக உள்ள **पत्नीत्वத்திற்கு**, ஏற்ப अर्थं சொல்லவேணும்.

पूर्वपक्षं :-*ஏன் பிராட்டி பெருமையை இப்படி அளவிடவேண்டும்?*

समाधानं :- ஒரு உதாரணத்தைப்பார்ப்போம் : मुक्तனுக்கு எம்பெருமானோடு பரமான साम्यं உண்டாகிறது என்பது, श्रुति- स्मृत्यादिகளில் நிலைநாட்டப்பட்டபோதிலும், இந்த साम्यத்தை, 'परमात्माவுக்கே உரித்தான लक्षणமாகிற' 'जगद्व्यापार वर्जं [43]' போன்ற, சில आकारங்களால் அளவுபடுத்தியே ஒப்புக்கொள்கிறோமல்லவா! அதுபோல, பிராட்டி விஷயத்திலும் அளவுபடுகிறது. மேலும், கீழ் प्रमाणத்தில் 'भिन्नलक्षणं' என்றல்லவா சொல்லியிருக்கிறது! இன்னும் 'पितेव त्वत्प्रेयान् என்று தொடங்கி माता तदसि नः [44]' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

---

*43. -லோகங்களின் ச்ருஷ்டி முதலிய கார்யங்களைத் தவிர*
*44. -(ஸ்ரீ குண) தகப்பனாரைப்போல் உன் கணவன்; ஆக நீ எங்களுக்குத் தாயாகிறாய்*

**एवं अनभ्युपगमे तां पुरस्कृत्य भगवदभिगमनमपि तत्र तत्रोक्तं दुश्शकं स्यात्।** अस्ति कर्मार्ह फलदे पत्यौ कृत्यद्वयं श्रियः । निग्रहाद् वारणं काले सन्धुक्षणमनुग्रहे ।

**उक्तं च श्रीविष्णुचित्तैः गद्यव्याख्यानारंभे** मातृत्वैकरूपां श्रियं प्रपद्यते । माता हि हितादपि पुत्रस्य प्रियमेव पश्यति, पिता उभयं पश्यति।अतः दण्डधरत्वहीनतैव अवलंबनं अस्यां दशायां आसीत् इति। **अत्र वरदगुरूपदेश अनुसारिभिः व्यसार्यैश्च उक्तं** प्रताप उष्मल पितृत्व दुरासद भगवत् समाश्रयण सिद्धये पुरुषकार अनुप्रविष्ट वात्सल्य निर्भर लक्ष्मी समाश्रयणं श्रीमच्छब्द विवरण मुखेन अभिधीयते **इति ।**

---

இப்படி ஒப்பாவிட்டால், 'அவளை முன்னிட்டுக்கொண்டு பகவானை அடையவேண்டும்' என்று ஆங்காங்கே சொல்லியி ருப்பது செய்யமுடியாததாகிவிடும். இது எதற்காகவென்றால், கர்மத்திற்கு எற்றவாறு பலனைத் தரும் கணவனான எம்பிரா னிடத்தில், லக்ஷ்மி செய்வன இரண்டு कार्यங்கள் - ஒன்று, தக்க தருணத்தில் அவனை निग्रहத்திலிருந்து தடுப்பது; இரண்டு, தக்க காலத்தில் अनुग्रहத்தில் மூட்டுவது. இதை गद्य व्याख्यान आरंभத் தில், எங்களாழ்வானும், 'मातृत्वैकरूपां श्रियं प्रपद्ये माता हि हितादपि पुत्रस्य प्रियमेव पश्यति, पिता उभयं पश्यति; अतः दण्डधरत्वहीनतैव अवलंबनं अस्यां दशायां आसीत्[45]।' என்றார். தன் गद्य व्याख्यानத் தில் அம்மாளின் उपदेशத்தை அடியொற்றி, व्यासाचार्यர் என்னும் श्रुतप्रकाशिकाचार्यரும், 'प्रतापोष्मल पितृत्व दुरासद भगवत् समाश्रयण

---

*45. -தாயாக இருப்பதே ஸ்வபாவமான லக்ஷ்மியை ஆச்ரயிக்கி றார். தாய் பிள்ளையின் நன்மையைவிட, ப்ரியத்தையும் ; தகப்பனோ இரண்டையும் பார்க்கிறான். ஆக, இத்தசையில் சிக்ஷிக்கும்தன்மை இல்லாமையே பிடிப்பாக ஆயிற்று.*

***ननु अस्या दण्डधरत्व अभावे*** *दैत्य दानव मर्दिनी* ***इत्यादि नामानि न घटेरन्,*** **मैवम्** । सीतायास्तेजसा दग्धां रामकोप प्रपीडितां **इत्यादिष्विव कोपस्य पतिसंश्रयत्वेऽपि अस्याः तदनुमति महिम्नाऽपि दैत्य निरासादि सिद्धेः । स्वासाधारण विभूतिविशेषद्वारा वा तदुपपत्तिः। तदभिप्रायेण हि पुराणेषु** सौम्यासौम्यैर्जगद्रूपैः **इत्याद्युच्यते।**

-------------------------------------------------------------

सिद्धये पुरुषकार-अनुप्रविष्ट वात्सल्य निर्भर लक्ष्मी समाश्रयणं श्रीमच्छब्द मुखेनाभिधीयते। [46]' என்றார்.

पूर्वपक्षं :- *தண்டிப்பதில்லையாகில், 'दैत्य दानव मर्दिनी [47]' என்றிவை முதலிய பெயர்கள் லக்ஷ்மிக்கு எப்படிப் பொருந்தும்?*

समाधानं :- 'सीतायास्तेजसा दग्धां रामकोपप्रपीडिताम्। [48]' முதலிய இடங்கள்போல, கோபம் பர்த்தாவுக்கு இருந்தபோதிலும், இவள் அதற்கு அநுமதிப்பதின் மஹிமையினால், असुरர்கள் அழிவதினாலாவது; தனக்கே உரித்தான சில विभूतिகளை முன்னிட்டாவது இவை பொருந்தும். இதே அபிப்ராயத்தில்தானே புராணங்களிலும், सौम्यासौम्यैर्जगद्रूपैः [49]' என்று சொல்லப்படுகிறது.

---

*46. -பராக்ரம-வெம்மையுடைய தகப்பனாராயிருக்கும் தன்மையினால் அணுகமுடியாத பகவானிடத்தில் ப்ரபத்தி ஸித்திக்க, புருஷகாரத்தோடு சேர்ந்த வாத்ஸல்யம் நிறைந்த லக்ஷ்மியை ஆச்ரயிப்பது, ஸ்ரீமத் என்னும் பதத்தின் விவரணம்.*

*47. -திதி-தனுவின் பிள்ளைகளாம் அஸுரர்களைக் கொல்லும்*

*48. -ஸீதையின் தேஜஸ்ஸினால் எரிக்கப்பட்டதும், ராமனின் கோபத்தினால் பீடிக்கப்பட்டதும்*

*49. -ஸௌம்யங்களாயும், அல்லாதனவாயுமான ரூபங்களினால் லோகம் (வ்யாபிக்கப்பட்டது)*

यत्किञ्चिदपि वैषम्यं यदि नामात्र नेष्यते । तयोर्देह व्यवस्थाऽपि न सिध्येत् सर्वसंमता ।। अव्यवस्थिति पक्षस्तु हेतुपक्षोऽयमित्यपि । अश्रुतत्वादिहानुक्तेः दूषणं वाऽपि नार्हति ।। न हि सिद्धे विकल्पस्स्यात् न सन्देहोऽत्र निश्चयात्। न कालाद्यैः विपर्यासः तन्नित्यत्वादि साधनात्।

---

[இவ்வளவு விளக்கத்தின் முடிவில், ஸ்வாமி தேசிகன் இவ்வாறு முத்தாய்ப்பு அருளுகிறார்]

இப்படி, எம்பெருமான்-பிராட்டி இவர்களுக்குள் ஒரு சிறிய வேற்றுமையை ஒப்பாவிடில், எல்லோருக்கும் सम्मतமான இவர்களின் देहादिகளில் சொன்ன வரையறைகள் सिद्धिக்காது.

*எம்பெருமான்-பிராட்டி இவர்களுடைய ஸ்வரூபம் முதலியவற்றில் ஒருவித வரையறையும் கிடையாது* என்றோ; அல்லது இதுவரை நாம் கூறியவற்றை *'எதற்கெடுத்தாலும் காரணத்தைக் கேட்கும் குழு' ( हैतुक पक्षं)* என்றோ சொல்லும் கட்சிகள், இங்கே கண்டிப்பதற்குக்கூட தகுந்தவை அல்ல. ஏனென்றால் அவைகள், முறையே, வேதத்தை அடிப்படையாகக் கொள்ளாதவை, அல்லது இந்த ஸந்தர்பத்தில் சொல்லப்படாதவைகளாம்.

ஆக, கீழே எம்பெருமான்-பிராட்டி இவர்களுடைய ஸ்வரூபம் முதலியவை பற்றி நாம் தெளிவித்தவையெல்லாம் ஸித்தமான விஷயமாதலால் விகல்பம் (இப்படியாவது /அப்படியாவது என்பது) ஆகாது; தீர்ந்தபடி சொன்னதால் ஸந்தேஹம் கிடையாது; நித்யமாக இருப்பதினால், காலம் முதலியவற்றாலும் மாறுபாடு இல்லாதது.

'இரண்டாவது श्लोकத்தாலே. பரத்வத்தை அநுபவித்துக் கொண்டு, பிராட்டியுடைய புருஷகாரத்வம் சொல்லப்படுகிறது,' என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை सङ्ग्रहिத்தார்.

## 3-வது श्लोकம்

**एवं स्तुति आक्षेप-समाधान व्याजेन स्वामित्व सौलभ्या- दिकं प्रतिपाद्य स्तोतुं उपक्रान्तः सर्वाश्रयणीयत्वाय सकल पुरुषार्थ हेतुत्वं उदाहरण विशेष अर्थान्तर न्यासाभ्यां उपपादयति** ईषदिति ।

----------------------------------------------------------

முதல் இரு ச்லோகங்களால், ஸ்தோத்ரம் செய்வதற்கு आक्षेप-समाधानं சொல்லும் व्याजத்தால் பிராட்டியின் 'स्वामित्वं-सौलभ्यं' இவைகளை நிரூபித்தார். மூன்றாவதால், 'இவள் எல்லோராலும் ஆச்ரயிக்கத்தகுந்தவள்' என்று சொல்லவேண்டி, 'எல்லா ப்ரயோஜனங்களுக்கும் இவளே காரணம்' என்பதை உதாரண/காரணங்களைக்கொண்டு விவரிக்கிறார்.

'मयि ते दयां विदन् अहं निर्भयः स्तोष्यामि, என்று சொன்னீர். சேதநர்க்கு इष्ट-अनिष्ट प्राप्ति-परिहारங்களுக்கு हेतुக்கள், அவ்வவருடைய पुण्य-पापங்களாயன்றோ ஆயிருக்க, உம்முடைய अभिमतं நம்முடைய कटाक्षத்தாலே सिद्धिத்தது என்னுமிடம், நம்பக்கலிலே आदरातिशयத்தாலே சொன்னவித்தனை" என பிராட்டி சொல்ல, "..पुण्यापुण्यावीश्वर प्रीतिकोपौ [50] என்கிறபடி துன்பவின்ப வினைகளுக்கு निर्वाहकனான ईश्वरனின் प्रियाऽप्रियங்கள்தான் अभिमत-अनभिमतसिद्धिகளுக்கு हेतुக்கள்; அவனுடைய प्रसाद-कोपங்களுக்கும் அடி, உன்னுடைய कटाक्ष-तदभावங்களாகையாலே, என் अभिमत सिद्धिக்கேயன்றி, सकल चेतनர்க்கும் ऐश्वर्यादिகளால் श्रेयस्, உன்னுடைய प्रसादத்தாலல்லது संभविயாதிறே! என்று तत्पुरुषार्थ प्रदत्वத்தை सोदाहरणமாகப் प्रतिपादिக்கிறார்" என்கிறார் ஆச்சான்.

---

*50. -புண்யம்-பாபமென்பவை ஈச்வரனுடைய ப்ரீதி-கோபங்களே.*

ईषत् त्वत् करुणा निरीक्षणसुधा सन्धुक्षणात् रक्ष्यते
नष्टं प्राक् तदलाभतः त्रिभुवनं सम्प्रत्यनन्तोदयम् ।
श्रेयो न हि अरविन्दलोचनमनः कान्ताप्रसादादृते
संसृत्यक्षर वैष्णवाध्वसु नृणां संभाव्यते कर्हिचित् ।। ( ३ )

अन्वयः - प्राक् तदलाभतः नष्टं त्रिभुवनं, संप्रति त्वत्करुणा निरीक्षणसुधा ईषत् सन्धुक्षणात् अनन्तोदयं रक्ष्यते। अरविन्दलोचन मनःकान्ताप्रसादात्ऋते नृणां संसृति-अक्षर-वैष्णवाध्वसु श्रेयः कर्हिचित् न हि संभाव्यते।

**பதவுரை** :

प्राक् तदलाभतः - முன்னம், அது (பிராட்டியின் कटाक्षं) பெறாததால்;

नष्टं त्रिभुवनं, संप्रति - நசித்துக்கிடந்த மூவுலகும், இப்போது;

त्वत् करुणा-निरीक्षणसुधा - कृपैயுடன்கூடிய உம்முடைய பார்வையாகிற अमृतवर्षத்தின்;

ईषत् सन्धुक्षणात् - ஒரு துளி பரவுதலால்;

अनन्तोदयं रक्ष्यते - எண்ணற்ற समृद्धिயை உடையதாகக் காப்பாற்றப்படுகிறது;

अरविन्दलोचन - தாமரைக்கண்ண (எம்பெருமா)னுடைய;

मनःकान्ता प्रसादात् ऋते - மனத்துக்கு இனியவளின் (பிராட்டியின்) அருளின்றி;

नृणां संसृति-अक्षर-वैष्णवाध्वसु श्रेयः -மனிதர்க்கு ऐश्वर्य कैवल्य परमपदं இவற்றில் உயர்ந்த ஸுகம்;

कर्हिचित् नहि संभाव्यते - ஒருபோதும் உண்டாகாதன்றோ!

**एतदनुग्रह एकदेशोऽपि अनन्त अनिष्ट निवृत्तेः अनन्त अभ्युदय सिद्धेश्च निदानमिति व्यञ्जयितुं** ईषच्छब्दः **।** त्वच्**छब्देन** प्रणिपात प्रसन्ना हि ; क्षिप्रप्रसादिनीं देवीं **इत्यादिषु उक्तः स्वभावः सूच्यते । सामान्यतश्च तदनुग्रहस्य सदातनत्वं उक्तं मङ्कण संहितायां** पद्मेस्थिता पद्मवर्णा पद्मनाभप्रिया शुभा । सदाऽनुग्रह संपन्ना सा मे देवी प्रसीदतु **इति । अष्टोत्तरशतनाम स्तोत्रे च** नमामि कमलां कान्तिं क्षमां क्षीरोद संभवाम् । अनुग्रहपरां ऋद्धिं अनघां हरिवल्लभाम् **इति ।**

---

**விளக்கம்**: **ईषत् -**இவளுடைய अनुग्रहத்தின் சிறு துளி கூட அளவில்லா अनिष्ट निवृत्तिக்கும்/क्षेमத்திற்கும் காரணம், என தெரிவிக்கிறது, இந்தப் பதம். **त्वत्** - பிராட்டியினுடைய ‘எப்போதும் अनुग्रहத்துடனேயே இருக்கும் [51] स्वभावं சொன்னது.

---

51. -(ராமா) *प्रणिपात प्रसन्ना हि -ஸேவிப்பதினாலேயே அருள் பாலிப்பவளல்லவா (ஸீதை)*
*-क्षिप्र प्रसादिनीं देवीं - சீக்கிரம் அநுக்ரஹம் செய்கிற தேவியை*
*-(மங்.ஸம்) -पद्मे स्थिता पद्मवर्णा पद्मनाभप्रिया शुभा । सदानुग्रह सम्पन्ना सा मे देवी प्रसीदतु । -தாமரையில் இருப்பவளும், தாமரை வண்ணம் உடையவளும், பகவானுக்கு பத்நியாகவும்- மங்களம் தருபவளாயும்-எப்போதும் அநுக்ரஹம் நிறைந்தவளான லக்ஷ்மீ, அருளவேண்டும்.*
*-(ல.ஸஹ) -नमामि कमलां क्षान्तिं क्षमां क्षीरोद सम्भवाम् । अनुग्रह परां ऋद्धिं अनघां हरिवल्लभाम् । பொறுமையாயும், பூமியாயும், கடலில் உதித்தவளும், அருளுவதையே ஸ்வபாவமாகயுடையவளும், தோஷமில்லா ஸம்பத்தும், பகவானின் பத்நியுமான லக்ஷ்மியை ஸேவிக்கிறேன்.*

**अनिष्टनिवर्तन इष्टप्रापण अनुगुण करुणा हेतुकं निरीक्षणं** करुणानिरीक्षणम्**। करुणया विषयीकरणं वा** निरीक्षण **शब्देन उपचर्यते । तदिदं उक्तं तत्संहितायां** सामर्ग्यजुर्मयीं देवीं वेदगर्भां मनस्विनीम् । लोकैकेश विभूतीनां कारणं यन्निरीक्षणम् **इति । तस्य विश्वसञ्जीवनतया** सुधात्व **रूपणम् । तया** सन्धुक्षणं- **संयक् उल्लासनम् । अत्र पञ्चमी उक्तं हेतुत्वं तु उदयापेक्षया रक्षणापेक्षया च योज्यम् ।**

---------------------------------------------------------------

'त्वच्छब्दத்தாலே, प्रणिपात-प्रसन्नैயாய் क्षिप्र-प्रसादिनिயாம்படி யான असाधारण स्वभावம் ஸூசிக்கப்படுகிறது. இத்தால் निग्रहानुग्रह स्वभावனான ईश्वरனில் व्यावृत्तமான अनुग्रहैक स्वभावत्वं சொல்லப் பட்டது,' என்கிறார் ஆச்சான்.

अनिष्टத்தைப்போக்க/इष्टத்தை அளிக்கத்தகுந்த கருணைக் குக் காரணமான பார்வையோ, அல்லது, கருணையினால் அங்கீ கரிப்பது உபசாரமாகவோ, **करुणानिरीक्षणं** எனப்படுகிறது.[52]

அந்த நிரீக்ஷணம், எல்லா வஸ்துக்களையும் உஜ்ஜீவிப் பதால், **सुधा** என்று சொல்லப்பட்டது. அந்த அம்ருதத்தினால் **सन्धुक्षण**மாவது, நன்றாக வ்ருத்தியடையும்படிச் செய்கை. सन्धुक्षणात् என்று 5-ம் வேற்றுமையினால் சொன்ன காரணத்தை, மேலே சொல்லும் रक्षणं-उदयंஎன்ற இருவிடத்திலும் சேர்த்து, அவ்விரண் டிற்குமே सुधा सन्धुक्षणंதான் காரணமென்று பொருளாம்.

*52. -(தத். ஸம்) -सामर्ग्यजुर्मयीं देवीं वेदगर्भां मनस्विनीम् । लोकैकेश विभूतिनां कारणं यन्निरीक्षम् । -லோக பாலகர்களின் ஐச்வர்யத் திற்கு எவளுடைய கடாக்ஷம் காரணமோ; எவள் ஸாம-ருக்- யஜுஸ் வேதஸ்வரூபமாயும், உட்கருவாகவும், நல்லெண்ண முடைவளாயும் இருக்கும் தேவி*

रक्ष्यते - **निरुपद्रवं अवस्थाप्यते ।** प्राक् **-त्वत् उपेक्षा काले,** तदलाभतः **-त्वत् निरीक्षण अलाभतः, नतु त्वत् कोपतः** कः कुप्येद् वानरोत्तम **इत्यादि वदन्त्याः तव कोप असंभवात् ।** त्रिभुवन **शब्देन त्रैलोक्य अन्तर्वर्तिनः क्षेत्रज्ञा लक्ष्यन्ते ।** संप्रति - ततः अवलोकिता देवाः **इत्याद्युक्तायां त्वन्निरीक्षण दशायां ।** अनन्तोदयं - **पूर्वकालादपि अतिशयित अभ्युदयं इत्यर्थः । उक्तं ह्येतत् सर्वं इन्द्रेण** त्वया देवि परित्यक्तं सकलं भुवनत्रयम् । विनष्टप्रायं अभवत् त्वया इदानीं समेधितम् **इति ।**

---

**रक्ष्यते** - **துன்பமுமின்றி ஸ்தாபிக்கப்படுகிறது. प्राक् -நீ உபேக்ஷை செய்த காலத்தில்;**

**तदलाभतः -உன்னுடைய கடாக்ஷம் இல்லாததினால்;** கோபத்தினால் அல்ல; 'कः कुप्येद् वानरोत्तम [53]'என்று சொல்கிற உனக்கு, கோபம் உண்டாகாதாகையால். **नष्टं -கேடுற்றமை;**

**त्रिभुवनं -**மூன்று உலகங்களிலுமுள்ள क्षेत्रज्ञர்கள் குறிக்கப்படுகிறார்கள். **संप्रति** - 'ततोऽवलोकिता देवाः [54]' என்றதுபோல், 'உன் कटाक्षं பெற்றநிலையில்' என்று பொருள்.

**अनन्तोदयं -முன்பைவிட அதிக समृद्धिயையுடையதாக.** இதை, 'त्वया देवि परित्यक्तं सकलं भुवनत्रयम्। विनष्ट प्रायमभवत् त्वयेदानीं समेधितम्।। [55]'என்றான் இந்த்ரன்.

---

*53. -(ராமா) -வாநரர்களில் சிறந்தவனே! யார் கோபத்துக்கு ஆளாகுமவர்கள்?*

*54. -(லக்ஷ்மியினால்) கடாக்ஷிக்கப்பட்ட தேவதைகள்*

*55.-(வி.பு) -லக்ஷ்மியே! மூவுலகும், நீ கைவிட்டபோது நாசத்திற்கு ஸமமாக ஆனது. இப்போது உன்னால் வளர்ந்தது*

**अत्र प्रळयादिकं विवक्षितं इति केचित् । एवं अन्वय व्यतिरेकाभ्यां एतत् कटाक्षाधीनं देवादीनां ऐश्वर्यं इति दर्शितम् । यथा आह काश्यपः** ब्रह्माद्याश्च सुराः सर्वे मुनयश्च तपोधनाः । एधन्ते त्वत्पदच्छायां आश्रित्य कमलेश्वरि **इति । मङ्कण संहितायां च अष्टानामपि लोकपालानां तत्पूजानिरतत्वं च प्रपञ्चितं द्रष्टव्यम् । उक्तसमर्थन व्याजेन सर्वपुरुषार्थानां तत्प्रसाद अधीनत्वमाह** श्रेय **इति।**

---

இங்கு, ப்ரளயம் முதலியவற்றைச் சொன்னதாக சிலர் கூறுவர். இப்படி, லக்ஷ்மி कटाक्षम् உள்ளதாலும்-இல்லாமையாலும், வளர்ச்சியும்- தேய்தலும் என்பதால் தேவதைகளின் ऐश्वर्यம் லக்ஷ்மியின் कटाक्षத்திற்கு வசப்பட்டது,

(பெரியவாச்சான்பிள்ளை, 'ப்ரளயத்திலே, ப்ரம்மா முதலான ஸ்ருஷ்டியை ஈச்வரன் உகக்கும்போது, இவள் கடாக்ஷமடியாக வாய்த்து உண்டாவது,' என்று உரைக்கிறார். ஆச்சானும், 'இரண் டாவது பொருளாக, இதே அர்த்தத்தைக் கையாளுகிறார்.)

இப்படியே காச்யபரும் 'ब्रह्माद्याश्च सुरास्सर्वे मुनयश्च तपोधनाः। एधन्ते त्वत् पदच्छायां आश्रित्य कमलेश्वरि [56]।।' என்கிறார். लोकपालர்கள் எண்மரும் இவளுடைய பூஜையில் ஈடுபட்டிருப் பது मङ्कण संहितैயில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கீழ்ச்சொன்னவைகளை ஸ்தாபிக்கும் பொருட்டு, எல்லா ப்ரயோ ஜனங்களும் லக்ஷ்மியின் அனுக்ரஹத்துக்கு வசப்பட்ட தன்மையைக் கூறுகிறார், **श्रेयः** என்று.

---

*56. -லக்ஷ்மியே! ப்ரம்மா முதலான எல்லா தேவர்களும், தவத்தையே ஐச்வர்யமாகவுடைய ருஷிகளும், உன்னுடைய திருவடிநிழலை அணுகி வ்ருத்தியடைகிறார்கள்.*

**अत्र त्वत्प्रसादात् इति वक्तव्ये** अरविन्दलोचन मनःकान्ता प्रसादा **दिति कथनं तथाविध प्रसिद्धि प्रकर्ष द्योतनार्थम्** । अरविन्द लोचन **शब्देन** यं पश्येत् मधुसूदनः **इत्याद्यभिप्रेतं श्रीपतेरपि अनु- ग्रह शीलत्वं सूच्यते । तन्**मनःकान्ता**त्वोक्तिः सर्वापेक्षित दाने तयोः समानाभिप्रायत्वं व्यनक्ति । अत्र** मन**शब्दः बुद्धावुप चरितः, भगवतः करणायत्त ज्ञानत्व अभावात्** । मनः कान्ता- **अभिमतेत्यर्थः । पूर्वं** कान्तस्ते **इत्युक्तं, अत्र तु इयं भगवतः कान्तेति । एतेन परस्परानुकूलतया सर्वत्र व्यापारे सामरस्यं व्यज्यते।**

---

'உன்னுடைய அருளால்' என்று கூறலாமாயிருக்க, **अरविन्द लोचनमनःकान्ता प्रसादात्** என்றது, அப்படிப்பட்ட அதிகமான ப்ரஸித்தியைத் தெரிவிப்பதற்காக. अरविन्दलोचन என்றதினால், 'லக்ஷ்மீபதியும் அநுக்ரஹம் செய்வதையே ஸ்வபாவமாகவுடைய வன்,' என்பதாகிறது.[57] அவன் மனதிற்கு இனிய மனைவி என்ற தால், எல்லோரும் விரும்பியதெல்லாம் தருவதில், இருவரும் ஒரேகருத்துடையவர்களென்பது ஸூசிதம். பகவானுக்கு ஞானம், (மனம்போன்ற) கரணங்களால் உண்டாவதில்லையாகையால் இங்கு मनः என்றது, ஞாநத்திற்கு உபசாரமாகும்; ஆக मनः कान्ता என்பதால், பகவானுக்கு மிகவும் ப்ரியமானவள் என்றர்த்தம்.

முதல் ச்லோகத்தில், कान्तः ते (உனக்கு அவன் ப்ரியமான கணவன்) என்றார். இங்கு, பகவானுக்கு இவள் இஷ்டமான பார்யை என்கிறார். ஆக ஒருவர்க்கொருவர் அநுகூலமாயிருப்ப தால் எல்லாவ்யாபாரங்களிலும் ஒருமித்திருப்பது குறிக்கப்பட்டது.

---

*57. -यं पश्येन्मधुसूदनः - பகவான் எவனைப் பார்க்கிறானோ (அவன் ஸாத்விகனாவான்)*

प्रसादात् -**कृपाविशेषात् इति यावत्, अस्याः क्वचिदपि निग्रह असंभवेन तन्निवृत्तिरूप प्रसाद अयोगात्** । संसृति **शब्द इह पुरुषार्थ समभिव्याहारात् पारिशेष्यात् च ऐश्वर्यपरः । तेन**

---------------------------------------------------------

'मत्स्य-मनुष्यादि विग्रह-परिग्रहं பண்ணினாலும்[58], கண்ணை மறைக்கப்போகாதேயிறே இருப்பது. सर्व अङ्गங்களும் மறையும் படியாகக் கவசமிட்டாலும், கண்ணைக் கவசமிடுவான் இலனிறே. இங்கனொத்த (अवाप्त समस्तकामत्व) வைபவத்தை உடையனான ஈச்வரனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பைப் பண்ணுமவளா யிருக்கும்...." என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

"சாந்தோக்யத்தில் लक्षणமாக 'तस्य यथा कप्यासं पुण्डरीकमेवं अक्षिणि [59]' எனப்பட்ட परमपुरुषனுக்கு तुल्यशीलैயான असितेक्षणै யிறே இவள்; 'அனைத்துலகுமுடைய அரவிந்த லோசனனைத் தினைத்தனையும் விடாள்,' என்ற वाल्लभ्यप्रसिद्धि தோற்ற விசே ஷிக்கிறார்" என்கிறார் ஆச்சான்.

**प्रसादात् ऋते**-விசேஷமான கருணையில்லாமல், என்றர்த்தம்; निग्रहத்திலிருந்து விடுவிக்கும் அருள் என்று சொல்வது பொருந் தாது. ஏனெனில், இவளுக்குத்தான் ஒருபோதும்- எவரிடத்திலும் निग्रहं உண்டவதில்லையே !

**संसृति** -இந்த பதம், प्रयोजनங்களைக் கூறும் பதங்களோடு சேர்த்து சொல்லப்பட்டதினாலும், மற்ற प्रयोजनங்கள் வேறு பதங்

---

*58. -मत्स्यः कमललोचनः ; महावराहः स्फुटपद्मलोचनः ; रामो राजीवलोचनः ; कृष्णः कमल लोचनः*

*59. -அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரைபோன்று இரு கண்கள் உள்ளன.*

**त्रिवर्गान्तर्भूतं सर्वं अभिमतमपि विवक्षितम् ।** अक्षर **शब्दस्तु प्रत्यक् आत्मानुभवपरः ।** वैष्णवाध्व **शब्देन गतिविशेषद्वारा भगवत्प्राप्तिः लक्ष्यते । एतेषु** श्रेयः - **श्रेष्ठं सुखं तत्साधनं वा ।** पुण्य श्रेयसी सुकृतं वृषः **इति हि पठन्ति ।** नृणा**मिति सर्व क्षेत्रज्ञ उपलक्षणम् । हिरण्यगर्भस्यापि ब्राह्मे पुराणे तदधीन ऐश्वयत्वं** 'पद्मयोनिरिदं प्राप्य पठन् स्तोत्रं ततः क्रमात्। दिव्यञ्चाष्टगुणैश्वर्यं तत्प्रसादाच्च लब्धवान् **इति ।।** ब्रह्मादीनां यदायत्तं वैभवं यस्य सा स्वयम् । तस्य कैमुत्यनिर्धार्यं ईश्वरत्वं श्रियः श्रियः ।।

---

களினால் குறிக்கப்பட்டதாலும் (प्राकृत) ऐश्वर्यங்களைத்தான் குறிக் கிறது. இதில் மூன்றுவித पुरुषार्थங்களும் அடக்கம்.

**अक्षर** शब्दம் जीवात्माவின் அநுபவத்தைச் சொல்லுகிறது. **वैषणवाध्वन्** என்னும் பதத்தினால், अर्चिरादि गतिயின் வழியாக பகவானை அடைவது குறிக்கப்பட்டது. இவைகளில் श्रेयः என்று, உயர்ந்த ஸுகமும், அதன் உபாயமும் சொல்லப்பட்டது. இப்படியே நிகண்டுவும் கூறுகிறது.

**नृणां** என்பது எல்லாவிதமான क्षेत्रज्ञர்களைக் குறிக்கிறது. ब्राह्म पुराणத்தில், 'पद्मयोनिरिदं प्राप्य पठन् स्तोत्रं ततः क्रमात्। दिव्यञ्च अष्टगुणैश्वर्यं तत्प्रसादाच्च लब्धवान् [60]।' என்று சொல்லப்பட்டது.

('ப்ரம்மா முதலியவர்களுடைய ஐச்வர்யம் எவளுக்கு வசப்பட்டதோ, அந்த லக்ஷ்மீ, தானாகவே எவனுக்கு பத்நியோ, அந்த भगवाனுடைய सर्वेश्वरत्वं, कैमुतिक न्यायத்தாலே सिद्धं அன்றோ', என்பது ஸ்வாமி தேசிகனின் காரிகை.)

---

*60. -ப்ரம்மா இந்த ஸ்தோத்ரத்தை அடைந்து, பிறகு முறையாக படித்து, லக்ஷ்மியின் கடாக்ஷத்தினால் உத்தமமான அஷ்ட ஐச்வர்யத்தையும் பெற்றார்.*

**एतत्** प्रसदादृते नृणां श्रेयो हि न संभाव्यत **इति व्यतिरेक उक्त्या अग्नीन्द्रादि प्रयुक्तमपि नृणां श्रेयः एतदधीनं इति व्यज्यते ।** हि **शब्देन श्रीसूक्त श्रीस्तुत्यादिषु सर्वशास्त्रेषु च प्रसिद्धिः द्योत्यते ।** न संभाव्यते - **न सिध्यति इत्यर्थः । ईदृशस्य अस्याः प्रभावस्य इन्द्रादीनामिव कालभेद भेद्यत्वं च नास्तीति व्यञ्जनाय** कर्हिचि**दित्युक्तम् ।**

***ननु मोक्षप्रदत्वं भगवत एवेति सर्वत्र स्थापितम् । श्रीसात्वते च स्वस्य मोक्षप्रदत्वं देवीनां ऐश्वर्यप्रदत्वं च***

---

இவளுடைய प्रसादं இல்லாவிடில் எவருக்கும் ஸுகம் ஏற்படுவதில்லையல்லவா, என்று எதிர் மறையாகச் சொன்னதால், अग्नि-इन्द्रன் முதலானோர் மனிதர்களுக்குக் கொடுக்கும் ஸுகம் இவளுக்கு அதீனமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

**हि** शब्दத்தால், श्रीसूक्तं, श्रीस्तुति ஆகிய எல்லா சாஸ்த்ரங்களிலும் இந்த प्रसिद्धि விளக்கப்படுகிறது என்று பொருள். **न संभाव्यते -**உண்டாவதில்லை என்றர்த்தம்.

**कर्हिचित्** என்பதால், இந்த லக்ஷ்மியின் அநுக்ரஹம், இந்த்ராதிகள் கொடுப்பதைப்போன்று, காலங்களின் வித்யாஸத்தினால் மாறுதல் அடையக்கூடியதல்ல, என்று குறிக்கப்பட்டது.

(இந்த ச்லோகத்து வ்யாக்யான முடிவில் ஒரு पूर्वपक्षத்துக்கு, ஸமாதானம் அருளிச் செய்கிறார்)

पूर्वपक्षं :- *மோக்ஷம் கொடுக்கும் தன்மை, பகவானுக்கே உண்டென்று எல்லா இடத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. श्री सात्वत सम्हितै யிலும், 'மோக்ஷம் கொடுக்கும்தன்மை, தனக்கு* (பகவானுக்கு) *உண்டென்றும்; தேவிகளுக்கு ஐச்வர்யம் கொடுக்கும்*

***विभज्य उक्तम् ; तदत्र*** *संसृत्यक्षर वैष्णवाध्व**स्विति अविशेष वचनं प्रशंसामात्रपरं स्यात्,*** **मैवम् । श्री सात्वत एव** यां आलंब्य सुखेनेमं दुस्तरं हि गुणोदधिम् । निस्तरन्ति अचिरेणैव व्यक्त ध्यान परायणाः **इति बन्धहेतुभूत ग़ुणोदधि निस्तरण कारणत्वेन लक्ष्मी समाश्रयणस्य प्रतिपादनात् । उक्तं च स्वयंभुवा** सर्वकामप्रदां रम्यां संसारार्णवतारिणीम् । क्षिप्रप्रसादिनीं लक्ष्मीं शरण्यां अनुचिन्तयेत् **इति।**

---

*தன்மை உண்டென்றும் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால், இங்கு, संसृत्यक्षर वैष्णवाध्वங்கள் இவள் அதீனம் என்று பொதுவாகச் சொன்னது, ஸ்தோத்ரம் செய்வதற்காக மட்டும்தான்*

समाधानं :- அப்படியில்லை. 1) ஸ்ரீ सात्वतसम्हितैயிலேயே, संसार बन्धமாகிய முக்குணக்கடலைக் கடப்பதற்குக் (மோக்ஷம் பெற) காரணமாக, लक्ष्मी संबन्धं சொல்லப்பட்டிருக்கிறது.[61]

2) ब्राह्म पुराणத்திலும் இது விளக்கப்பட்டது.[62]

---

*61. -यामालंब्य सुखेनेमं दुस्तरं हि गुणोदधिम्। निस्तरन्त्यचिरेणैव व्यक्त ध्यानपरायणाः। -வ்யக்த ரூபத்தையே த்யாநம் செய்பவர்கள், எந்த லக்ஷ்மியை ஆச்ரயித்து மற்றவர்களினால் தாண்டமுடியாத இந்த ஸம்ஸாரக்கடலை, ஸுகமாக சீக்கிரமாகவே கடக்கிறார்களோ*

*62. -सर्वकामप्रदां रम्यां संसारार्णव तारिणीम्। क्षिप्रप्रसादिनीं लक्ष्मीं शरण्यां अनुचिन्तयेत् ।। - எல்லா இஷ்டங்களையும் கொடுப்பவளாய், அழகானவளாய், ஸம்ஸாரக்கடலை கடக்கவைப்பவளாய், சீக்கிரம் அநுக்ரஹிப்பவளான லக்ஷ்மியை, அடையவேண்டியவளாக நினை.*

**ब्राह्मे च पुराणे तन्नामानि एवं पठ्यन्ते** सकृद्विभाता सर्वार्ति समुद्र परिशोषिणी ; भव भङ्गापहारिणी ; पर निर्वाणदायिनी ; ज्योतिष्मत्यमृतावहा **इत्यादीनि । वैष्णवे च** आत्मविद्या च देवि त्वं विमुक्तिफल दायिनी **इति। अत्र विमुक्ति फलदायित्वस्य आत्मविद्या विशेषणत्वेऽपि तादृश विद्यायाः तदधीनत्व उक्त्या प्रकृत सिद्धिः । मोक्षहेतुभूत आत्मगुण सिद्धिश्च तदधीनेति तत्र तत्रोक्तम् ।**

---

3) லக்ஷ்மியினுடைய பெயர்களாக, 'सकृत्विभाता सर्वार्ति समुद्र परिशोषिणी, भव भङ्गापहारिणी, परनिर्वाणदायिनी, ज्योतिष्मत्यमृतावहा [63]' என்னப்பட்டன.

4) விஷ்ணுபுராணமும், 'आत्मविद्या च देवित्वं विमुक्ति फलदयिनी [64]' என்றது. இங்கு, विमुक्ति फलदायित्वं. आत्मविद्यैக்குத்தானே विशेषणமாகச் சொல்லியிருக்கிறது; என்றால், இப்படிப்பட்ட வித்யையும் அவளுக்கு அதீனம் என்பதால், லக்ஷ்மிக்கு मोक्ष प्रदत्वं सिद्धिக்கிறது.

5) மோக்ஷத்துக்குக்காரணமான ஆத்மகுணங்கள் ஸித்திப்பதும் அவள் அதீனம் என்று அந்தந்த இடங்களில் கூறப்படிருக்கிறது.

---

*63. -ஒருமுறை ப்ரகாசித்தவள்-எல்லா துன்பக்கடலை வற்றும் படி செய்பவள்; ஸம்ஸாரத்தில் உண்டாகும் அவமானத்தைப் போக்குபவள்; மேலான மோக்ஷத்தை அளிப்பவள்; ப்ரகாசம் உடையவள்-மோக்ஷமளிப்பவள்*

*64. -தேவியே! நீ மோக்ஷபலத்தைக் கொடுக்கிற ஆத்மவித்யை*

**एवं स्थिते गद्यारंभ उक्तन्यायेन मोक्षोपाय तदधिकारयोः तावत् एतन्मूलत्वं दुरपह्नवम्। मोक्षप्रदे भगवति मुमुक्षूणां घटकतया एषा तिष्ठतीति च सर्व संमतम् । परिपूर्णानुभव प्रदान सङ्कल्पस्तु भगवतः स्वस्यैव वा, सपत्नीकस्य वेति यथाप्रमाणं भवतु । सर्वथा वैष्णवाध्व श्रेयःप्रदत्वं अस्या इह उच्यमानं न विरुद्धमिति ।**

---

ஆக, शरणागति गद्य आरंभத்தில் கூறியுள்ளபடி, மோக்ஷத்தின் உபாயம்-அதில் அதிகாரம் இவைகளுக்கு லக்ஷ்மிதான் காரணம் என்பது மறைக்கமுடியாதது. மோக்ஷத்தைக் கொடுக்கும் பகவானிடத்தில், மோக்ஷத்தில் ஆசையுள்ளவர்களுக்கு புருஷகாரமாக -घटकமாக- அவள் நிற்கிறாள் என்பதும் எல்லோரும் ஒப்புக் கொண்டதே. परिपूर्णानुभवं கொடுக்கும் सङ्कल्पமானது பகவானுடையதா அல்லது அவனுடைய பத்நியினுடையதா என்பது प्रमाणத்தை அநுஸரித்து இருக்கட்டும்; இவ்விடத்தில், 'எவ்விதத்தாலும் மோக்ஷத்தை அடைவதில் ஸுகத்தை லக்ஷ்மிதான் கொடுக்கிறாள்' என்று சொல்லப்படுவது விருத்தமானதல்ல.

பெரியவாச்சான்பிள்ளை, 'न च पुनरावर्तते। न च पुनरावर्तते, तद्विष्णोः परमं पदं, பிணை கொடுக்கிலும் போகவொட்டார்' என்று, இப்படி श्रुतिயோடு-ஆழ்வார் பாசுரத்தோடு வாசியற ப்ரதிபாதிக்கிற (பரமபதமான) இவ்வழிகளில் अरविन्दलोचन मनःकान्तैயுடைய प्रसादத்தை ஒழிய मनुष्यரில் வைத்துக்கொண்டு ஒருவருக்கும் श्रेयस् வராது என்கிறார் ஆளவந்தார்' என்கிறார்.

ஆச்சானும், 'पुरुषार्थान्तरங்களோடு-विलक्षण पुरुषार्थத்தோடு விசேஷமற सकल श्रेयस्ஸும் तत्प्रसादத்தாலல்லது संभवियாது என்னுமிடத்தை स्थिरीकरिத்தருளினாராய்த்து,' என்கிறார்.

## 4-வது श्लोकம்

**एवं श्लोकत्रय उक्तायाः सहधर्मचारिण्या भगवतः स्वरूप विग्रह अवतारेषु अयोगव्यवच्छेदं वदन् अस्या अपि तद्वत् प्रधानप्राप्यत्वं सूचयति** शान्ते**ति ।**

---

இந்த श्लोकத்தால், கீழே மூன்று பாட்டுக்களால் எடுத்த பகவானுடைய பத்நிக்கு, அவருடைய स्वरूप-विग्रह-अवतारங்களில், ஒருபொழுதும் பிரிவில்லாத சேர்த்தியை (अयोग व्यवच्छेदத்தை)ச் சொல்லி, 'இவளும், நாம் முக்கியமாக அடைய வேண்டிய ப்ரயோஜனம்' என்று ஸூசிப்பிக்கிறார்.

நான்காவது श्लोकத்தின் அவதாரிகையில் ஆச்சான் , "இப்படி श्लोकत्रयத்தாலும் प्रकृतिயான श्री शब्दार्थத்தை அருளிச் செய்து, अनन्तरं, प्रत्ययமான मतुप्பின் अर्थத்தை அருளிச் செய்வதாகத் திருவுள்ளம் பற்றி, भगवत्स्वरूपगुणादिகளில் तत्सहधर्मचारिणिயான இவளுடைய स्वरूपादिகளுக்கு உண்டான अयोग व्यवच्छेदத்தை अनुसन्धिயா நின்றுகொண்டு . . . उभय विभूतिக்கும் नित्य-रक्षकமாய் नित्य-प्राप्तமான नित्य-योगத்தை அநுபவித்து. . . . . . ." என்று அருளிச்செய்கிறார்

शान्तानन्त महाविभूति परमं यद्ब्रह्मरूपं हरेः
मूर्तं ब्रह्म ततोऽपि तत्प्रियतरं रूपं यदत्यद्भुतम् ।
यान्यन्यानि यथासुखं विहरतो रूपाणि सर्वाणि तानि
आहुः स्वैः अनुरूपरूप विभवैः गाढोपगूढानि ते ।। (4)

अन्वयः - शान्त अनन्त महाविभूति परमं ब्रह्म हरेः यत् रूपं, ततोऽपि तत्प्रियतरं मूर्तं ब्रह्म अत्यद्भुतं यत् रूपं, यथासुखं विहरतः अन्यानि यानि रूपाणि, तानि सर्वाणि ते स्वैः अनुरूपरूप विभवैः गाढोपगूढानि आहुः।

**பதவுரை** : शान्त - பசி, தாகம், சோகம், மோகம், மூப்பு, இறப்பு என்ற षडूर्मिகளும், பிறவி முதலான விகாரங்களுமில்லாத;

अनन्त - அளவிடமுடியாத ;

महाविभूति - பெரிய विभूतिகள் இரண்டையும் பரவியாள்வதும்;

परमं ब्रह्म - தனக்கு மேலொன்றும் இல்லாததும், ब्रह्मं என்று சொல்லப்படுவதுமான ;

हरेः यत् रूपं - ஹரியினுடைய யாதொரு स्वरूपं உண்டோ;

ततोऽपि तत्प्रियतरं - அதைக்காட்டிலும் भगवाனுக்கு மிகவும் प्रियமாயும்;

मूर्तं ब्रह्म - रूपादि गुणங்களைப் பெற்றதும், ब्रह्मं என்று சொல்லப்படுவதும் ;

अत्यद्भुतं यत् रूपं - மிகவும் ஆச்சர்யமானதுமான யாதொரு रूपं உண்டோ;

यथासुखं - सुखத்துக்கு சிதைவின்றி

विहरतः - லீலைகள் செய்கின்ற எம்பெருமானுக்கு;

अन्यानि यानि रूपाणि - வேறு திருமேனி யாவையோ;

तानि सर्वाणि ते - அந்த स्वरूपादिகளெல்லாம் உன்னுடைய;

स्वैः अनुरूपरूप विभवैः - असाधारणங்களாய், தகுந்தவைகளான दिव्य स्वरूपादिகளால்;

गाढोपगूढानि आहुः - நன்கு இணைக்கப்பட்டனவாக (प्रमाणங்கள்) கூறுகின்றன.

शान्तं - **अशनायादि ऊर्मिभिः अपक्षयादि विकारैश्च नित्य अनन्वितं इति भावः।** अनन्तं -**त्रिविध परिच्छेद रहितम्। महत्यौ शुद्धाशुद्धे विभूति यस्य त**न्महाविभूति **।**

------------------------------------------------------------

**விளக்கம்: शान्तं -**என்பதற்கு, பசி முதலிய षडूर्मिகளோடும்[65], குறைதல் போன்ற நிலை மாற்றங்களோடும்[66] எப்போதும் தொடர்பு அற்றதாயும், என்று பொருள்.

**अनन्तं -**(தேச-கால-வஸ்துரூபமான) மூன்று விதமாயும் அளவுபடாதது, என்று பொருள்.

{இங்கு आनन्द என்று पाठान्तरமாக, (தன்னைத்தான் அநுபவிக்கும்போது सुखावहமாயிருக்கை என்று) பெரியவாச்சான்பிள்ளையும், இரு पाठங்களையும் ஆச்சானும் கையாண்டிருக்கிறார்கள்.}

**महाविभूति -சுத்த-அசுத்தமாயிருக்கும் இருவித பெரிய விபூதிகளை உடைய;**[67]

---

*65. -अशनाया पिपासेऽथ शोकमोहौ जरामृती। युगपत् प्राण धी देह धर्मास्ते हि षडूर्मयः। -ப்ராணன்-புத்தி-தேஹம் இவைகளுடன் இணைந்த தர்மங்களான பசி-தாகம்-சோகம்-மோஹம்-முதுமை-இறப்பு ஆகியவைகள் ஷடூர்மிகள்*

*66. -(வி.பு) अपक्षय विनाशाभ्यां परिणामर्द्धि जन्मभिः। वर्जितः शक्यते वक्तुं यः सऽस्तीति केवलम्। - குறைதல்-அழிதல்-மாறுபடுதல்-வளர்தல்-உண்டாதல் (போன்ற நிலை மாற்றங்கள்) இல்லாது, எவன் 'எப்பொழுதும் உள்ளவனாகவே இருக்கிறான்' என்று சொல்வதற்கு ஏற்றவனோ*

*67. -पादोऽस्य विश्वा भूतानि । त्रिपादस्याऽमृतं दिवि - ப்ராக்ருதமான எல்லா உலகங்களும் இவன்(விபூதியில்) கால்பாகம்; பரம பதத்தில் அழிவற்ற முக்கால்பாகமுள்ளது*

परमं - **सर्वोत्कृष्टम् ।** यच्छब्दः **सर्वोपनिषत्प्रसिद्धिं सूचयति ।** ब्रह्म - **निरतिशय बृहत्व बृह्मणत्वयुक्तं।** रूपं - **स्वरूपं इत्यर्थः। अत एव व्यतिरेक विभक्तिश्च अत्र घठते ।**

----------------------------------------------------------

**परमं -எல்லாவற்றையும்விட மேலானது;**

பெரியவாச்சான்பிள்ளை, 'परो मा अस्य इति परमः' 'ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா' என்கிறபடியே தன்னு டைய निरुपमत्वं प्रतिपादिக்கப்படுகிறது' என்கிறார்.

**यत् -** 'எல்லா உபநிஷத்துக்களிலும் प्रसिद्धं' என்கிறது.

**ब्रह्म -**எல்லையில்லா பெருமையும், பிறர்க்கு பெருமை உண்டாக்கும் தன்மையும் உடைய

**रूपं -** स्वरूपं என்று (முதல் வேற்றுமையாகப்) பொருள். இதனால் அடுத்ததாக हरेः என்று 6-ம்வேற்றுமையில் பிரித்துச் சொல்லியிருப்பதும் பொருந்துகிறது.

[இந்த श्लोकத்தில் ஒவ்வொரு पादத்திலும் ஒருமுறை रूपं என்கிற पदं வருகிறது. साधारणமாக 'रूपं' என்பதிற்கு, 'विग्रहं' (கண் முதலியவைகளால் அறியும் உருவம்) என்று பொருள். இந்தப் पदம் उपयोगப்படுத்தப்பட்ட நான்கு இடங்களிலுமே 'विग्रहं' என अर्थம் சொல்வது ஸரியல்ல; ஏனென்றால், அப்போது पुनरुक्ति (மறுபடியும் சொல்வது) என்ற दोषं வந்துவிடும். ஆகையால், 1-2-3-4ம் पादங்களில் சொன்ன रूपं என்ற पदத்திற்கு முறையே, பகவானின் स्वरूपं, दिव्य मङ्गळ विग्रहं, अवतार विग्रहं, ஸ்ரீயினுடைய स्वरूप मङ्गळ अवतार विग्रहादिகள் என்றே பொருள். ஏனென்றால், ஆங்காங்கே रूपத்திற்குச் சொன்ன विशेषण पदங்கள் -அதாவது, **हरेः** रूपं, **मूर्तं** रूपं, **विहरतः** रूपाणि, **स्वैः** रूपं என்பன, வெவ்வேறு பொருளைத் தருகின்றனவே !

*ஏன் முதல் पाद த்தில் வரும் रूपं என்பதற்குத்தான் स्वरूपं என்று अर्थं சொல்லவேண்டும்? (மற்ற 2,3,4-வது पाद ங்களில் ஏதாவது ஒன்றில் சொல்லக்கூடாதா !)* என்றால்:

i) வரிசையாகச் சொல்லும்போது, முதலில் धर्मिயையும், அடுத்து धर्मங்களையும் சொல்வதுதானே முறை. இங்கு स्वरूपं என்பது धर्मि; அதனுடைய रूपं (विग्रहं) என்பது धर्मं; ஆகையால் श्लोकத்தின் முதல் रूपத்திற்கு, धर्मिயான स्वरूपं என்றும், அடுத்து வரும் रूपத்திற்கு, धर्मமான विग्रहं என்றும் अर्थं சொல்வது பொருத்தம்.

ii) முதல் पादத்தில் 'हरेः रूपं' என்று இருக்கிறது. இந்த இடத்தில், रूपं என்பதை (யாருடைய? என்பதை) விளக்க வந்த 'हरेः' என்ற சொல் विशेषणமாகிறது. இந்த हरि என்பது, நாம் அறிந்த/ காணும் भगवाனுடைய विग्रहத்தைக் குறிக்கும். ஆக 'हरेः रूपं' என்றால், அந்த विग्रहத்தினுடைய स्वरूपं என்றுதான் சொல்லமுடியும். ஏன், 'हरेः-रूपं' இரண்டிற்குமே स्वरूपं என்றோ, विग्रहं என்றோ अर्थं கொள்ளலாமே என்றால், ஒன்று, पुनरुक्ति दोषं வரும்; இரண்டாவது, व्याकरणத்திற்குப் புறம்பாகும் - எப்படியென்றால், व्याकरणப்படி विशेषण-विशेष्यங்கள் இரண்டையும் ஒரே வேற்றுமையில் சொல்லக்கூடாது. இங்கு हरि என்பது विशेषणं ; रूपं என்பது विशेष्यं. ஆகையினால்தான் विशेष्यமான रूपं என்பதை முதல் வேற்றுமையிலும், विशेषणமான हरिயை 'हरेः' (हरिயினுடைய) என்று ஆறாம் வேற்றுமையிலும் சொன்னது பொருந்துகிறது.

iii) முதல் पादத்தில் சொன்ன रूपं என்பதற்கு, *ஏன் அதிகப்படியாக 'स्वरूपं' என்று சொல்ல வேண்டும்; रूपं (विग्रहं) என்ற நேர் अर्थத்தையே கொள்ளலாமே* என்றால், இரண்டாம்

हरेः - **आश्रितदोषहारिणः सर्वेश्वरस्य, यद्वा सर्व संहर्तुः, यथोक्तं पुराणे** ब्रह्माणं इन्द्रं रुद्रं च यमं वरुणमेव च । निगृह्य हरते यस्मात् तस्मात् हरिरितीर्यते **इति । एतत् च चतुर्विध प्रळयकर्तृत्व उपलक्षणम्।उक्तस्वरूपानुरूपं** मूर्तं ब्रह्म महाभाग **इत्यादि प्रसिद्धं सालंबनयोग विषयभूतं दिव्य विग्रहमाह** मूर्त**मिति।** मूर्तं **-स्पर्श रूपादियुक्तं परमपद पर्यङ्कादि देशपरिच्छिन्नं चेति अर्थः।**

--------------------------------------------------------------

